விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 31 செவ்வாய்க்கிழமை (14.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146

# யாழ்ப்பாணத்தை சுழட்டிய மினி சூறாவளி

## 42 குடும்பங்கள் பாதிப்பு : 200 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட அசாதாரண காலநிலையினால் 42 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 200 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை நேற்று முற்றாக பாதிப்படைந்தது.

இயற்கை அனர்த்தங்களினால் நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை வேளையிலிருந்து இடி மின்னலுடன் கூடிய அடைமழை பெய்யத் தொடங்கியது.

நேற்று அதிகாலை தொடக்கம் இடி மின்னல் தாக்கங்கள் காணப்பட்டன. திடீரென பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரமாக கொட்டிய மழையுடன் பலத்த காற்றும் இடி மின்னலும் காணப்பட்டது.

திடீரென இந்த அசம்பாவிதங்கள் இடம் பெற்றதால் மக்கள் செய்வதறியாது திக்குமுக்காடினர். பிறமாவட்டங்களுக்கு செல்லவென பஸ் நிலையத்தில் நின்றவர்கள் திடீரென வீசிய கடும்காற்றினால் விழி பிதுங்கி நின்றனா.

நகரப் பகுதிகளில் காணப்பட்ட பெயர்ப் பலகைகள் தூக்கி வீசப்பட்டன. வீடுகளுக்கு



மேலாகவும் வீதிகளிலும் பெரும் மரங்கள் சரிந்து விழுந்தன. வீதிகள் மக்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

அரச திணைக்களங்களுக்கு ஊழியர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டது. பாடசாலைகளுக்கும் குறைந்தளவான மாணவர்களே சென்றனர்.

போக்குவரத்துக்களும் சிலமணி நேரத்திற்கு மந்தமாகவே காணப்பட்டது.

இந்த மினி சூறாவளி மற்றும் இடி மின்னல் தாக்

(20ஆம் பக்கம் பார்க்க)

# எச்சரிக்கை...!

## மகாசென் புயல் இலங்கைக்கு அண்மையில்

(கொழும்பு)

மகாசென் புயல் திருகோணமலையிலிருந்து 650 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ளதால் இதன் தாக்கம் இலங்கைக்கு ஏற்படலாம் என வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி வசந்தகுமார் தெரிவித்தார்.

மகாசென் புயல் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு ஊடான அம்பாந்தோட்டை வரையிலான

(20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

## நீதிமன்றை நாடத்திட்டம்

(கொழும்பு)

வட மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்த உள்ளதாக இந்தியாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதி வழங்கியுள்ள நிலையில், நீதிமன்றத்தின் ஊடாக தேர்தலை ஒத்திவைத்து, இந்தியாவை மீண்டும் ஏமாற்றுவதற்கு தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய, இந்த தேர்தலுக்கு எதிராக அரசாங்கத்தின் கூட்டணி கட்சியான அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி தடையுத்தரவு ஒன்றை பெற தயாராகி வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கில் குடியிருந்து தற்போது இடமபெயர்ந்துள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் பெயர்கள் வட மாகாணத்திற்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதால், அவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இதனால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் எனவும் அந்த

(20ஆம் பக்கம் பார்க்க)

# மின்னல் தாக்கி இளைஞன் பலி

(கரவெட்டி)

தொண்டைமானாறுப் பெரியமலை கடற்பரப்பில் இடி மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் பெரிய மலைக் கடற்பரப்பில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வல்வெட்டித்துறை ஆதிகோவில் பகுதியில் இருந்து தொழில் நிமித்தம் இரு மீனவர்கள் படகில் சென்று கொண்டிருந்த வேளை தொண்டைமானாறு பெரிய மலை கடற்பரப்பில் 8-ம் பாகத்தூரப் பகுதியில் திடீரென மின்னல்

(20ஆம் பக்கம் பார்க்க)

# வீடு திரும்பினார் அசாச் சாலி



(கொழும்பு)

இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த

(20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரப்பகுதியில் இயங்கிய விபச்சார விடுதி முற்றுகை

## ஜோடியாக இருந்த இருவர் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புறநகரில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்று நேற்றையதினம் யாழ்.பிரதேச செயலக அதிகாரிகளினால் முற்றுகையிடப்பட்டது.

யாழ்.நகரப்பகுதியை அண்மித்த யாழ். பிரதான வீதியில் இயங்கி வந்த விடுதி ஒன்றில் விபச்சாரம் இடம் பெறுவதாக சந்தேகிக்கப்பட்டதை அடுத்து, குறித்த விடுதியை நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பிரதேச செயலர் உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் நிஷாந்தன் ஆகியோர் முற்றுகை இட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# வட மாகாண சபை தேர்தலில் கே.பி. களமிறங்குகிறார்

## வாக்கு சிதறலுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் களத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய புள்ளிகளாகத் திகழ்ந்த கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன், தயா மாஸ்டர் ஆகியோரும் போட்டியிடும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் போட்டியிடும் பட்சத்தில் அரச தரப்பு பட்டியலிலேயே களமிறங்குவார்கள் என எதிாபாக்கப்படுகின்றது.

அதேவேளை, தேர்தல் களத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)



# பஸ் விபத்து 25 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இரண்டு தனியார் பேருந்துக்கள் கைதடிப் பாலத்தில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 25 பேர் வரை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது. இதில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்தும் மோதி பலத்த சேதங்

(20ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொது பல சேனா அமைப்பு நாடாளுமன்றுக்கு செல்லாது

## அதன் உறுப்பினர்கள் திட்டவட்டம்

நாம் ஒரு போதும நாடாளுமன்றம் செல்லமாட்டோம் என பொது பல சேனா நேற்றுத் தெரிவித்தது. நோர்வேயிடமிருந்தோ அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தாவது தாம்பணம்பெற்றதை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச நிரூபித்தால் மக்களிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு 2 மணித்தியாலங்களில் பொது பல சேனாவை கலைத்து விடுவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் பொது பலசேனா உருவாக்கபடுவதற்கு 2 வருடங்களுக்கு முன் வடக்கில்துன்புற்றுக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக நோர்வே சென்றதாக ஞானசார தேரர தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பௌத்த சமயத்தை முற்றாக அழித்து விட விரும்பும் சிவசேனா போன்ற இந்துத்துவ அமைப்புக்களுடன் அமைச்சர் விமலுக்கு தொடர்பு இருப்பதாக நம்புகின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி விடுவிக்கப்பட்ட பின்னர்பூனை போல்ஆகிவிட்டார். முடியுமாயின் அவரை மீண்டும்கைது செய்ய வேண்டும் எனவும் அவர கூறினார்.

நாட்டில் தற்போது கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பல பிரச்சினைகள ஏற்பட்டுள்ளன.

இந்த பிரச்சினைகளை விரைவில் பிரஸ்தாபிக்கவுள்ளோம் எனவும் பொது பல சேனா தெரிவித்தது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். (எ-11)


கணபதி துணை

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2013



14.05.2013 செவ்வாய்க்கிழமை

தேர்த்திருவிழா

காலை 10.00 மணி

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்

www.inuvilinfo.com இணுவில்

Ayngaran International www.ayngaran.com



தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)


### முடிப்பிள்ளையாருக்கு கொடியேற்றம் இன்று

(வேலணை)

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் இத் திருவிழாவில் எதிர்வரும் 23ஆம் திகதி 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (எ-8)

# இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியாவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

## தமிழ்க் கூட்டமைப்பு ஏற்பாடு

(வவுனியா)

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையில் வவுனியாவில் ஆத்ம சாந்தி பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க் காலில உயிர் நீத்த மக்களின் 4ஆம் ஆண்டு நினைவு நாளை அனுஷ்டித்து ஆத்மசாந்தி பிரார்த்தனைக்கூட்டமொன்றை வவுனியாவில் நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் இப் பிரார்த்தனை நிகழ்வை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க கூட்டமைப்பினர் முடிவு செய்துள்ளனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உறுப்பினர்கள், ஏனைய கட்சித்தலைவர்கள், பிரமுகர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் அனைவரையும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

இன அழிப்பு நோக்குடன் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டியது தமிழர்களாகிய நமது ஒவ்வொருவரதும் வரலாற்றுக் கடமையாகும். "மே 18" உலகத்திலுள்ள அனைத்துத் தமிழ் மக்களாலும் மறக்க முடியாத ஓர் வரலாற்றுத்துயரம் நிறைந்த நாளாகவே நோக்கப்படுகின்றது. யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள் உயிர்நீத்த இந்நாளை, தமிழ் மக்கள் அனைவரும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாகவும், அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் நாளாகவும் அனுஷரித்து வருகின்றமை கவனத்துக் குரியதாகும்.

இந்த நாளில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் எங்கள் வீடுகளில் உயிர் நீத்த ஓர் உறவினை நினைவு கூருவதைப் போலவே நினைந்துருகி, வன்னி இறுதி யுத்தத்தில் உயிர் நீத்த மக்களுக்கும் அஞ்சலி செய்வோமாக. அவர்களின் ஆத்ம சாந்திக்காக ஒன்று கூடிப் பிரார்த்திப்போமாக.

மே 18,19 ஆம்திகதிகளை அரசு போர் வெற்றி நாளாகப் பிரகடனப்படுத்தி ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. இந்த வெற்றிக் கொண்டாட்டங்களினால் இந்நாட்களில் நடைபெற்ற ஓர் இன அழிப்பு நடவடிக்கையை சிங்கள மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் மூடிமறைத்து வருகின்றது. இறுதி யுத்தத்தின்போது உயிர் நீத்த இந்நாட்டுப் பிரஜைகளை இந்த அரசு இந்நாட்களில் ஒரு சிறு கணப்பொழுதேனும் நினைவுகூரத் தலைப்பட்டதில்லை. மாறாக இறந்த எம் மக்களின் புதைகுழிகளுக்கு மேல் நின்று யத்த வெற்றிக் கொண்டாட்டங்களைக் கொண்டாடி வருகின்றது.

எனவே இந்நாளில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு உணர்வுபூர்வத்துடன் எமது உறவுகளை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும். அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டும். இதன் மூலம் இந்நாட்டில் நடைபெற்ற மிகப்பெரும் பேரவலத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-8)


## மரண அறிவித்தல்



### கனகசபை காலிங்கராஜா (சின்னமணி)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை புகுந்த இடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை காலிங்கராஜா அவர்கள் 2013 வைகாசி 10ஆம் திகதி அன்று இணுவிலில் இயற்கை மரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசபை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா, நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், நேசமலர் அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார், விஜயகுமாரி, சசிகுமாரி, நந்தகுமாரி, பாலகுமார், திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா, சந்திரகுமார், ஆழகானந்தன், குமுதா, சுஜீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்சா, யதுர்சா, விக்னேஷ், ஹரீஷ், ஹரிணி, வைஷினி, வர்ஷினி, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கண்மணி, காலஞ்சென்ற பொன்னம்மா, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2013 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி.
இணுவில் தெற்கு. இணுவில்
தொடர்பு :- க.திலீபன்(மகன்) 0778462355 (சி-3331)

தகவல் :
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### சுப்பையா கனகம்மா

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு ஆடியபாதம் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கனகம்மா நேற்று (13.05.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம் அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குமாரமூர்த்தியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற விசாலாட்சி மற்றும் செல்லாச்சி, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவநீதரம்பையின் (முகாமை உதவியாளர், யாழ் மாநகர சபை) பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தத்தின் அன்பு மாமியாரும், லிபூசன், கேசவநாத், கனிமொழி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 22, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

(இ)

தகவல்:
குடும்பத்தினர்



## காண்பியக் கலைக்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலையும் வடிவமைப்பும் 3-ம் வருட மாணவர்களின் காண்பியக் கலைக்காட்சி.

இடம் - கலைக்கூடம் - கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதி, யாழ்.பல்கலைக்கழகம்

காலம் - 16, 17, 18 / 05/2013

நேரம் - காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை

பிரவேசம் இலவசம்

அனுசரணை:
குமரன் கட்டடப் பொருள் விற்பனையாளர்
கந்தசாமி கோவிலடி
இணுவில் மேற்கு, இணுவில்
077 400 2263, 077 1754667

(2618)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail: valampurii@yahoo.com







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் மிகவும் திறமைசாலியானவர். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவ்வப்போது மது குடிப்பார்.

இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்து விட்டார். இது அனைவருக்கும் துன்பத்தை ஏற்படுத்தியது. ராஜாவே குடிக்க ஆரம்பித்து விட்டால், இராச்சியம் என்ன ஆவது?

ராஜாவின் குடிப்பழக்கம் ராணியின் மனதினுள் கஷ்டத்தை ஏற்படுத்தியது. என்ன செய்யலாமென ஒருநாள் பூராகவும் யோசித்தாள்.

அச்சமயத்தில் புத்திசாலியான அமைச்சர் ஒருவர் அரண்மனையிலே இருந்தார். அவரிடம் ராணி சென்று விடயத்தைச் சொன்னாள்.

“மன்னரை எப்படியாவது இந்த மதுப்பழக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும், அதற்கு நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டாள்.

“சரி” என்று ராணியிடம் அவர் சொன்னார்.

அதன்பின் ஒருநாள் அந்த ராஜா இருந்த தனி அறையினுள் நுழைந்தார் அமைச்சர்.

அங்கே வைக்கப்பட்டிருந்த மது போத்தலை தன் மடியிலே மறைத்து கொண்டார்.

ராஜா தற்செயலாக இதைக் கவனித்து விட்டார். உடனே அமைச்சரை அருகில் அழைத்து “மடியிலே என்ன அது?” என்று கேட்டார்.

“ஒன்றுமில்லை” என்று அமைச்சர் மறைத்தார். “உண்மையைச் சொல், மடியிலே என்ன?” என்று மறுபடியும் ராஜா கேட்டார்.

“இது... இது... இது...வந்து... கிளி” என்றார் அமைச்சார்.

“என்ன உளர்றே? கிளியா அது?” என்று ராஜா கேட்டார்.

“இல்லை... இல்லை... இது குதிரை” என்று அமைச்சர் கூற ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.

“இதோ பார்! செய்த குற்றத்தை ஒத்துக்கொள்! அதுதான் உனக்கு நல்லது, அதைவிடுத்து குதிரை-கழுதை என்று கதை சொல்லிக்கொண்டு இருக்காதே” என்றார்.

“மன்னா! நீங்கள் சொல்வதுதான் கரெக்ட்! என் மடியிலே இருப்பது கழுதைதான்” என்றார்.

மன்னனின் கோபம் மேலோங்கியது.

“இதோ பார்! உள்ளதை உள்ளபடி கூறினால் உயிரோடு விடுவேன், இல்லையேல்... உன் தலையை வெட்டும்படியாக உத்தரவு போடுவேன்” என்றார்.

அமைச்சர் உள்ளதைச் சொல்லி விட்டார். இப்போதும் சொல்கிறேன்... நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை” என்றார் அமைச்சர்.

ராஜா முறைத்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார், “மன்னா! முதலிலே ஒரு கிளாஸ் மது உள்ளே போனால் ஒன்றும் செய்யாது, அதைத்தான் “ஒன்றுமில்லை” என்றேன்.

இரண்டாவது கிளாஸ் மது உள்ளே போனதும் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்பி சொல்லிக்கொண்டிருப்பார். அதனாலே “கிளி” என்று சொன்னேன்.

மூன்றாவது கிளாஸ் மது உள்ளே போனதும் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான். நாலாவது கோப்பை மது உள்ளே போனதும் கழுதை மாதிரி கத்துவான்.

ஐந்தாவது மது கோப்பையின் போது மனிதன் மதுவாகவே மாறிவிடுவான்.

இவ்வாறு அமைச்சர் சாமர்த்தியமாக எடுத்துக் கூறியதைக் கேட்டதும் ராஜா மதுவின் அடிமையில் இருந்து மீண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்வேறு தேவைகளுடன் இயங்கும் தேராவில் சோழர்சிறுவர் நிலையம்

(றெப்பானா)

தேராவில் சோழர் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதுடன் பல தேவைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. மாணவர்களின் பராமரிப்புச் செலவுகள், ஆசிரியர்களின்சம்பளம், பராமரிப்பவர்களின் சம்பளம் என பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதால் தொடர்ந்தும் 5 மணி வரை இந்நிலையத்தை நடத்த முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

3 வயது முதல் 5 வயது வரையுள்ள சிறுவர்கள் சுமார் 60 பேர் இங்கு கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களின் தேவைகள் தற்போது அதிகரித்துள்ளன. குறிப்பாக ஆரோக்கியமான பாடசாலை, நிலையான கட்டட வசதி, சிறப்பான விளையாட்டு முற்றம், குடிநீர் வசதிகள் எனப் பல அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையமாகவே தற்போதும் இருந்து வருகின்றது.

தற்போது கிளாரட் சிறுவர் எழுச்சித் திட்ட அனுசரணையுடன் இருக்கின்ற ஆசிரியர்களையும் பராமரிப்பாளர்களையும் 8 மணி தொடக்கம் 2 மணி வரை இந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தினை இயக்கி வருவதாக இந்நிலைய பொறுப்பாசிரியர் இசைஞானவதி தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை சிறார்களுக்கு பல தொழில்நுட்ப வசதிகளுடனும்நிறைவான ஒரு சூழலிலும் அவர்களுக்கான கல்விபோதிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறான சூழலை இங்கும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதே இக் கிராம மக்களின் எதிர்பார்ப்பாகவும் வேண்டுதலாகவும் உள்ளது.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பராமரிப்பு நிலையம் ஆரம்பத்தில் குறைகளற்ற சிறப்பான வளத்துடனும் சிறந்த ஆசிரியர்கள் பலத்துடனும் இயங்கி வந்துள்ளது. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இயங்கிவரும் ஒரு சிறுவர் பராமரிப்பு நிலையமாக காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-260)

# யுத்த அழிவுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை

(குருமன்காடு)

யுத்தம் காரணமாக அழிவடைந்த வீடுகள் மற்றும் உடைமைகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

இதன்முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத் தாஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீல் ஏற்பட்ட சொத்தழிவுகள் தொடர்பான விபரங்கள் பொது மக்களிடம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்திட்டம் ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு 32 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாகவும் வடக்கில் தற்போது பொதுமக்களின் பாதிப்புக்கள் தொடர்பில் தரவுகள் பெற்றுக்கொள்வதற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் யுத்தத்தால் ஏற்பட்டுள்ள சொத்திழப்புக்கள் தொடர்பிலான விபரங்களை பொலிஸ் நிலையத்தின் ஊடாக உறுதிப்படுத்தி மாவட்டச் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறும் மாவட்ட செயலகத்தினால் புனர்வாழ்வு அதிகார சபைக்கு விபரங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் 3 மாதங்களுக்குள் இந்த நட்டஈட்டு கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைச்சின் ஆலோசகர் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். (அ-250)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 |
| தக்காளி | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 70 | 60 | 80 |
| கரட் | 80 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 190 | 120-180 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 70 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- |
| பயற்றங்காய் | 90 | 100 | 60 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 60 | 70-80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 |
| தேசிக்காய் | 100 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | [illegible] | 90 | 100 |

# இராசி பலன்

14.05.2013
(சித்திரை 31, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.34 மணிவரை
திருவாதிரை மாலை 6.16 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை

**மேடம்** நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க நினைப்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும், வாய்ப்புகள் தேடி வரலாம்.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் சிலவற்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் விதத்தில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து உறவினர்களின் வருகையால் சில செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், போசன நன்மையுண்டு.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** தடைகள் விலகி தனவரவுகள் பெருகும் நாள், கனிவாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளை காண வேண்டிய நாள்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வியாபாரத்தில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், களஸ்திர நன்மையுண்டு.

**மகரம்** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு கிடைக்கலாம், பகைவர்கள் விலகுவர், தன்னம்பிக்கை அதிகரிக்கும், மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனநிறைவளிக்கும் சம்பவங்கள் ஒன்று நடைபெறலாம், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** தூர தேசச் செய்திகளால் நன்மையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு, செய்தொழில் நலன் கருதி புதிய வழியை கையாள்வீர்கள், ரோக பயமுண்டு.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமுர்த்தி ச.அபி.நிறுவனத்தில் உதவி வழங்கும் நிகழ்வு

(தும்பளை)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் இப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 150 மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கல் மற்றும் திரிய தியச உதவித் திட்டத்தின் கீழ் நான்கு பேருக்கு நாற்பதாயிரம் ரூபா வீதம் பணம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை 10 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்வார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(அ-19)







## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு ஞான வைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நேற்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகியது. இதன் உற்சவங்கள் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளன.

உற்சவ காலங்களில் பூசை வழிபாடுகள் தினமும் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்ப்மாகி முற்பகல் 11.45 இற்கு மூல்ஸ்தான பூசையும் நடைபெற்று பிற்பகல் 12.45இற்கு பகல் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.

பின்னர் மாலை 6.30 மணிக்கு மூலஸ்தான பூசையுடன் ஆரம்பமாகும் திருவிழா வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவதோடு இரவுத் திருவிழா முடிவடையும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமையன்று 11 ஆம் திருவிழாவான தீர்த்தத் திருவிழாவும் மாலை 6.30 மணிக்கு திருவூஞ்சலும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(அ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

உற்சவத்தின் 9 ஆவது நாளான 22 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு 9 மணிக்கு சப்பறமும் 10 ஆம் நாளான் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 இற்கு தீர்த்தமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை யினர் தெரிவித்துள்ளனர்.(அ)

# கார்மேல் உத்தரிய மாதா தேவாலயத்தில் இடி வீழ்ந்தது





(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க தேவாலயத்தின் மீது இடி விழுந்ததில் தேவாலயத்தின் அரைவாசிப் பகுதி முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் குருநகர் பங்ஷால் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் குறித்த வீதியிலமைந்துள்ள கார் மேல் உத்தரிய மாதா ஆலயமே சேதத்துக்குள்ளானது.

நேற்றுக்காலை சுழல் காற்றுடனும் இடி, மின்னலுடனும் கூடிய பெருமழை யாழ்ப்பாணத்தின் அனைத்து பிரதேசங்களிலும் பெய்துள்ளது.

இதன்போது மாதா கோவிலின் ஒரு பக்க சுவர்ப் பகுதியில் இடி வீழ்ந்துள்ளது.

இதனால் கோவிலின் முகப்பு முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளதோடு கோயிலின் கூரையும் கீழே வீழ்ந்துள்ளது.

இவ் இடிச் சம்பவத்தின்போது குறித்த கோவிலில் 4 பேர் வழிபாட்டை முடித்துவிட்டு கோவிலின் முன்புறமாக அமர்ந்திருந்த போதே இவ் இடிச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதனால் அந் நால்வரும் கணப் பொழுதில் தெய்வாதீனமாக எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பினர்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ். பொலிஸார் ஆகியோர் அனர்த்தம் நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டதோடு பொதுமக்கள் இடிபாடுகளை அகற்றும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவ் அனர்த்தத்தின்போது கோவில் முகப்பில் மேற்பகுதியில் இருந்த பெரிய மாதா சிலையொன்றின் சிரசுப் பகுதி சரிந்த நிலைக்கு உள்ளானது.

இதனால் நேற்றைய தினம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு காணப்பட்டதோடு, தேவாலயம் சேதமடைந்தமையால் மேலும் ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படுமோ என்ற அச்சத்திலும் அப்பகுதி மக்கள் காணப்பட்டனர்.(அ-4-6)

## கலட்டி வீதியை புனரமைக்குக

(கரணவாய்)

நூகாவில் கலட்டி வீதி சேதமடைந்து உள்ளமையால் அவ் வீதியால் பயணிக்கும் யாவரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நூகாவில் கலட்டி வீதி புனரமைக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்த நிலையில் தற்போது இது பழுதடைந்துள்ளது. இவ்வீதியால் பயணிப்போர், மாணவர்கள் எனப் பலரும் சிரமங்களோடு பயணிக்க வேண்டியுள்ளனர்.

எனவே, பொறுப்பான அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ் வீதியை விரைவில் புனரமைத்துத் தரும்படி பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (அ-3-60)

## வாய்க்காலுக்குள் பாய்ந்தது கார்



(யாழ்ப்பாணம்)

வேகமாக சென்ற கார் வீதியில் இருந்து விலகி 10 அடி ஆழமுள்ள வாய்க்கால் ஒன்றுக்குள் வீழ்ந்துள்ளது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் கொக்குவில் ஆடியபாதம் வீதியின் அம்மன் வீதி பாலத்தில் இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்து சம்பவம் இடம்பெற்ற பின்னர் காரில் சென்றவர்கள் காரின் கண்ணாடியினை உடைத்தே வெளியேறியதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு விபத்துக்குள்ளான காரும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கார் வாய்காலுக்குள் விழுந்தமைக்கு காரணம் வாய்க்காலின் கரையில் பாதுகாப்பு வேலிகள் பொருத்தப்படாமையே எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (எ-4)

## யாழ்.கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அதிபர் பதவிக்கு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் பணி புரியும் அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடசாலை அதிபராக உள்ளவர்கள் தற்போதைய பாடசாலையில் 2013 ஜூலை 20 ஆம் திகதியன்று மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் மேலும் 3 வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை நிர்வாகக் கிளையில் பெற்று எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு வாழ்நாளில் கண்டிராத எதிர்ப்பை சந்திக்கப் போகின்றது

## 700 தொ.ச.இணைந்து வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கோ சர்வாதிகார அடக்கு முறைகளுக்கோ நாம் அஞ்சப் போவதில்லை. உத்தேச மின் கட்டண அதிகரிப்பை முழு அளவில் இரத்துச் செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நேற்று முதல் ஒரு வாரகால அவகாசம் வழங்கு கின்றோம்.

வீண் பிடிவாதம் பிடித்தால் 21 ஆம் திகதி தேசிய வேலை நிறுத்தப் போராட்டத்தால் நாடே ஸ்தம்பித்துப் போகும் என்று தொழிற் சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால் காந்த எச்சரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிக்கையில், சட்டத்தரணிகள் வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பஸ் உரிமையாளர்கள் என 700 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தயார் நிலையில் உள்ளன.

எனவே, இனி அரசாங்கம் போலி நடிப்பையும் நிவாரண வாக்குறுதிகளையும் காண்பித்து மக்களை ஏமாற்ற முடியாது. சர்வாதிகார குடும்ப ஆட்சியை மக்களாட்சி வெற்றி கொள்ளும் போராட்டமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்வதோ, உழைக்கும் மக்களை பாதுகாப்பதோ அல்லது நாட்டை அபிவிருத்தி செய்வதோ இந்த அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. மாறாக நாட்டையும் மக்களையும் சுரண்டித்தான் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும்.

அடக்கு முறைகளைப் பொதுமக்கள் மீது பிரயோகித்து சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க 2005 ஆம் ஆண்டில் மக்கள் ஆணை வழங்கவில்லை என்பதனை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு மனசாட்சி இல்லை என்பது தெளிவாகி விட்டது. அவ்வாறானால் இனியும் அரசு கூறுவதற்கு தலையை ஆட்ட வேண்டிய தேவை எமக்கில்லை.

மின் கட்டண உயர்விற்கு ஜனாதிபதி வழங்கிய சலுகைகளை அலரிமாளிகைக்குள்ளேயே வைத்துக் கொள்ளட்டும். வெளியில் விட்டால் அதனை தோற்கடிக்க அணி திரளுவோம்.

ஆகவே, நேற்று (13 ஆம் திகதி முதல் சரியாக ஒருவார கால அவகாசத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றோம். உடனடியாக மின் கட்டண அதிகரிப்பை விலக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எதிர்வரும் திங்கள் நள்ளிரவு முதல் முழு நாடும் ஸ்தம்பித்துப் போகும். இதனை ஈடு செய்ய அரசாங்கத்தின் அதிகாரத்தால் முடியாது.


இதுவரையில் 700 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்துள்ள அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் மின்கட்டண அதிகரிப்பை எதிர்த்து 21 ஆம் திகதி போராட்டத்தில் குதிக்கவுள்ளனர். அதைத் தவிர வைத்தியத்துறைசார் தொழிற் சங்கம் கல்வி மற்றும் சட்டத்துறை என பல தரப்பினரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இவ்வாறானதொரு எதிர்ப்பை அரசு ஏன் வாழ்நாளில் கண்டிருக்காது என்றும் கூறினார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>உயரம் : 5'4"<br>கி.பா:- 70,7 இல் செவ்<br>தகைமை/தொழில்: BA, MA<br>பத்திரிகை ஆசிரியர்<br>தொ.இ: B -1486 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்:5'5"<br>கி.பா: 58.25, 4 இல் செவ்<br>தகைமை/தொழில்:<br>பட்டதாரி (BSc), MBS<br>படிக்கின்றார்<br>தொ.இ: G -685 |
| பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 26, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc,<br>நில அளவையாளர்<br>தொ.இ: B -289 | பிறப்பு: 1990 இந்து (V)<br>நட்சத்திரம்:அச்சுவினி 1,<br>4இல் செவ்<br>உயரம் : 5'5"<br>தகைமை/ தொழில்:A/L<br>தொ.இ: G-686 |
| பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 36, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L,<br>அமெரிக்க PR<br>தொ.இ: B -494 | பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 22.5<br>தகைமை/ தொழில்: சட்டத்தரணி<br>தொ.இ: G -688 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'7"<br>கி.பா:56.25, 2இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L,<br>Germany<br>தொ.இ: B -495 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்:மூலம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: L.L.B.,<br>L.L.m சட்ட ஆலோசகர்<br>(அமெரிக்கா)<br>தொ.இ: G -697 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


# மாற்று வலுவுள்ளோருக்கான பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும்



கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் மாற்று வலுவுடையோருக்கான பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடும் எதிர்வரும் 15.05.2013ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

(சி/3330)

**இடம் : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்**

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ள பயனாளிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

**போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன**

பூநகரி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.00 மணி
முழங்காவில் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.00 மணி
தர்மபுரம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.30 மணி



**மேலதிக தொடர்புகளுக்கு: 021-228 5393**
**மகேஸ்வரி நிதியம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னர் வடக்கில் மட்டும் பிரச்சினை; தற்போது நாடு முழுவதுமே பிரச்சினை

**நாட்டு மக்களதும் எதிர்க்கட்சிகளதும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி, அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ளது. வரலாற்றில் என்றுமில்லாத அடக்கு முறையை நோக்கியே அரசாங்கம் செல்ல முற்படுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவருமான தயா கமஹே தெரிவித்துள்ளார்.**

கொழும்பு இராஜகிரியவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மின் கட்டணத்தை உயர்த்தியது அரசாங்கத்தின் சூழ்ச்சியாகும். அரசாங்கத்தின் மக்கள் எதிர்ப்பு செயற்பாடுகளை, ஊடகங்கள் ஊடாக அவர்கள் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இல்லாதொழிப்பதே மின்கட்டண அதிகரிப்புக்கான சூழ்ச்சிகளில் ஒன்றாகும்.

பயங்கரவாதம் இலங்கையில் நிலவிய போது கூட சுதந்திரமாக நாம் இயங்கினோம். வடக்கில் மட்டுமே பிரச்சினைகள் அதிகமாக இருந்தன. ஆனால், இன்று நாடே பிரச்சினைகளை சந்திக்கின்றது. அசாதாரணமான விலையேற்றத்தினால் மக்கள் சுதந்திரத்தையும் உரிமையையும் இழந்து தவிக்கின்றனர்.

இன்று தேநீருக்கு சீனி வாங்குவது முதல் பிரத்தியேக வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவது வரை அதிகரித்த விலையேற்றத்தால் மக்கள் அவதிப்படுகின்றனர். பேருந்து கட்டணம் முதல் காஸ் விலை வரை அன்றாடம் மக்கள் தலையில் விலையேற்ற சுமைகள் இறக்கி வைக்கப்படுகின்றன. ஆனால், அரசாங்கம் தேசத்திற்கு மகுடம் என ஊழல் செய்வதோடு கார்ரேஸ்களையும் களியாட்டங்களையும் நடத்தி மகிழ்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் மின்சார சபையில் ஊழல் இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சி மீது அரசாங்கம் குற்றம் சாட்டுகின்றது. அவ்வாறெனில் ஏன் நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களை நிறுத்தி குற்றத்தை நிரூபிக்க முடியாது.

உண்மையில் ஊழல் இடம்பெற்றிருந்தால் அது நிரூபிக்கப்பட வேண்டும். சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதியால் இலகுவில் அதனை செய்ய முடியும். ஆனால், அவ்வாறு செய்யாது பொய்யான குற்றச்சாட்டுக்களை எம்மீது வைப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசு தேசத்திற்கு மகுடத்தை செய்வதற்காக வங்கிகளிலிருந்து கடனைப் பெற்று ஆடம்பரமாக செலவு செய்கின்றமையினால் வங்கிகள் எல்லாம் நட்டத்தில் இயங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

சூரியவெவ மைதானத்தையும் மத்தள விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டையில் அமைத்தமையினால் எவ்வித பயனும் இல்லை. அதனால் அரசாங்கத்திற்கு நட்டம் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்துக்கு பதிலாக கட்டுநாயக்க விமான நிலையத்தை விஸ்தரிக்கக் கூடிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கிடைத்த ஜி.எஸ்.பி. பிளஸ் தடை செய்யப்பட்ட போது, அரசாங்கம் அது தொடர்பில் எவ்வித பொறுப்புடனும் செயற்படவில்லை.

தற்போது பங்களாதேஷ் கட்டட இடிபாடு விபத்தின் பின்னர் அச்சலுகை மீண்டும் இலங்கைக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அரசாங்கம் இதனைத் திறம்பட பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் இன்று மதுவை ஒழிப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரச தரப்பு அமைச்சர்களிடமே பல மதுபான நிலையங்களின் உரிமைகள் உள்ளன. 95% மதுபான நிலையங்கள் அரசாங்க தரப்பிடமே உள்ளன. இது போன்ற நடவடிக்கைகள் நாட்டை அதல பாதாளத்திற்கே இட்டுச் செல்லும். எனவே, இந்த அரசாங்கத்தின் ஆட்சி மாறவேண்டும். பராக்கிரமபாகு மன்னருக்கு பின்னர் இந்த நாட்டுக்கு கிடைத்த மிகச் சிறந்த ஆட்சி ரணிலினுடையதே. மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு நாம் ஒன்றுபட்டு செயற்படுவோம் என்றார். (அ-2)

## அரச திணைக்களங்களில் அதிரடி மாற்றங்கள்

உகண்டாவுக்குச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அரச நிறுவனங்கள் பலவும் அதிரடி மாற்றங்களைச் செய்யவுள்ளன. அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள், அதிகார சபைகள் மற்றும் ஏனைய சபைகள் என்பவற்றின் உயர் பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என்று அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச நிறுவனங்களில் நிலவும் செயற்திறன் இன்மை, ஊழல் என்பன காரணமாகவே இந்த அதிரடி மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)

## அஸ்வமேத மஹாயாகம்

காரைநகர் புகரி சிவசுப்பிரமணிய ஆலயத்தின் ஒருவருட நித்திய உற்சவ பூர்த்தியை கொண்டாடும் முகமாக அஸ்வமேத மஹாயாகத்தை முன்னிட்டு ஊர்வலம் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 22 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. அதற்கிணங்க 2 ஆம் நாள் ஊர்வலமானது 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சுட்டிபுரம் அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, கொடிகாமம் சந்தியை அடைந்து, ஏ-9 வீதி வழியாக சாவகச்சேரி நகரை 10 மணிக்கு வந்தடையவுள்ளது.

பின்னர் கைதடி ஊடாக செம்மணி வழியே நல்லூரை அடைந்து, நல்லூர் பின் வீதியூடாக கல்வியங்காடு-திருநெல்வேலி வீதி சந்தியை அடைந்து, யாழ். நகருக்குச் சென்று கே.கே. எஸ். வீதியினூடாக கொக்குவில் சந்தியை அடைந்து ஆனைக்கோட்டை சந்திக்கு வந்து இல.786 போக்குவரத்து வீதி வழியாக காரைநகர் வந்தடையவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ)


## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.
## கேள்வி அறிவித்தலும், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்சவகால வியாபார உரிமமும் - 2013

எதிர்வரும் 27.05.2013ஆம் திகதி நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள், வாகனப்பாதுகாப்பு நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. பொருத்தமானவர் கேள்விப்பத்திரங்களை அரக்கு முத்திரையிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : அலுவலக நாட்களில் 2013.05.14 தொடக்கம் 2013.05.20 காலை 10.00மணி வரை
கேள்விப்பத்திரம் வழங்கும் நேரம் : மு.ப.8.30இல் இருந்து 2.30 வரை கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்
இறுதித்திகதி : 2013.05.20 மாலை 2.00மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 2013.05.20 பி.ப3.00மணி
கேள்வி திறக்கும் இடம் : கரைதுறைப்பற்று பிரதேசசபை,முல்லைத்தீவு

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர்,கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை கொண்டு வருதல் வேண்டும்.கேள்விதாரர் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பதை அந்தப்பகுதி கிராமசேவையாளர் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

| இல. | விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு (மீளளிக்கக்கூடியது) | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 01. | துவிச்சக்கரவண்டி | 500.00 | 5000.00 | 30000.00 |
| 02. | மோட்டார்சைக்கிள் | 500.00 | 5000.00 | 60000.00 |
| 03. | ஏனைய வாகனங்கள் | 500.00 | 5000.00 | 30000.00 |

### நிபந்தனைகள்

01) திருவிழாக்காலங்களில் 26.27.05.2013ஆம் திகதிகளில் மட்டுமே பாதுகாப்பு நிலையங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.
02) துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், வாகனம் என்பன தொலையும் சந்தர்ப்பத்தில் குத்தகை எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
03) தங்களால் அமைக்கப்படும் பாதுகாப்பு வேலிக்கு தாங்களே ஒளியூட்டுதல் வேண்டும்
04) சுற்றுவேலி தாங்களாகவே அமைத்தல் வேண்டும்.
05) கேள்விதாரராகத் தெரிவு செய்யப்படுபவர் பிரதேசசபையால் குறிக்கப்படும் திகதிகளில் முழுப்பணத்தையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.
06) ஆரம்ப கேள்வித் தொகைக்கு குறைந்த தொகையில் விண்ணப்பித்தாலோ அல்லது சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டு குறித்த திகதிக்குள் பணத்தினை செலுத்தத்தவறினாலோ குறித்த நபரின் பெயர் கறுப்பு பட்டியலில் இணைக்கப்படுவதுடன் இவரின் வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்பினால் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

### வியாபார உரிமம்

01) மேற்படி ஆலயத்தில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கான உற்சவகால வியாபாரத்திற்கான உரிமத்தினை 2013.05.20 தொடக்கம் 2013.05.23வரை கடமை நேரத்தில் முள்ளியவளை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். 2013.05.24 தொடக்கம் 2013.05.27 வரை கண்ணகை அம்மன் ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உற்சவகால பணிமனையில் பெற்றுக் கொள்ளமுடியும்.
02) ஆலய பரிபாலன சபையினரால் உற்சவகால வியாபார நிலையத்தினை நிறுவுதலுக்கான நிலவாடகை பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே வியாபார உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
03) உணவுச்சாலை, தேநீர்ச்சாலை, குளிர்களி, குளிர்பான விற்பனை நிலையங்களிற்கான உரிமம் 26.05.2013 பி.ப.1.00மணி வரையும் வழங்கப்படும். அதன்பின்னர் உரிமம் வழங்கப்படமாட்டாது. அந்த உரிமத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான சுகாதார அறிவுறுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 27.05.2013 பி.ப.3.00 மணிக்கு ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உற்சவ கால பணிமனையில் நடைபெறும்.
04) வேறு பிரதேசங்களில் தயாரிக்கப்பட்ட உணவு,குளிர்களி,குளிர்பான வகைகளைக் கொண்டு வரும் வியாபாரிகள் தத்தமது பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பெற்றுக் கொண்ட 2013ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமத்தை சமர்ப்பித்தால் மட்டுமே உற்சவ கால உரிமம் வழங்கப்படும்.

உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகள், குளிர்களி, குளிர்பான விற்பனை நிலையங்கள் நடத்துபவர்களுக்கான பொது சுகாதாரப் பரிசோதகரது அறிவுறுத்தல்கள்

01) தற்சுகாதாரத்தை பேணவேண்டும்.
02) புகைத்தல், வெற்றிலை மெல்லுதல் மற்றும் உணவுப் பொருள் வண்ணத்தாள், அச்சடிக்கப்பட்ட தாள்களில் வைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
03) உணவுப் பொருட்கள் பரிமாறும் போது இடுக்கி பயன்படுத்துதல் வேண்டும்.
04) உணவுப் பொருட்கள் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருத்தல் வேண்டும்.
05) பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விதிகளையும் நிபந்தனைகளையும் மீறுபவர்கள் மீது தண்டம் அறவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

13.05.2013
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

க.மோகனராஜகுமார்,
செயலாளர்,
கரைதுறைப்பற்றுபிரதேசசபை, முல்லைத்தீவு.


(சி-3327)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் ஆரோக்கியத்தில் விற்றமின் சி இன் பங்களிப்பு

விற்றமின் சி தண்ணீரில் கரையும் விற்றமின். ஆகும்.இதற்கு அஸ்கோர்பிக் அமிலம்(ascorbic acid)என்று வேறு ஒரு பெயரும் உண்டு. விற்றமின் சியை நம் உடலால் தயாரிக்க முடியாது. ஆகவே, நாம் உண்ணும் உணவிலிருந்துதான் இதைப் பெற வேண்டும்.அல்லது மாத்திரை மருந்து மூலம் பெற வேண்டும்.

இந்த விற்றமின் உள்ள உணவுப் பொருட்களைச் சமைக்கும் போது அதிகமாகச் சூடுபடுத்தினால் சுமார் எழுபது சதவீதம் இந்த விற்றமின் அழிந்து விடும்.அதே போல் சூரிய வெளிச்சம் காற்று போன்றவையும் இந்த விற்றமினுக்கு எதிராகச் செயற்படக் கூடியவை.ஆகவே இந்த



விற்றமின் உள்ள உணவுகளைச் சமைத்து நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்து வைத்தால் விற்றமின் அளவு குறைந்து விடும்.

பொதுவாக 100மில்லி லீற்றர் குருதி இழையத்தில் மாவில் 0.7லிருந்து 1.2 மில்லி கிராம் வரை விற்றமின் சி இருக்கும்.

வழக்கத்தில் சிட்ரஸ் பழங்கள் என்று அழைக்கப்படும் தோடை, திராட்சை எலுமிச்சை, நெல்லிக்காய் ஆகியவற்றில் விற்றமின் சி அதிகமுள்ளது. இவை தவிர முட்டைக்கோஸ், தக்காளி, உருளைக்கிழங்கு, பப்பாளி, மாம்பழம், ஸ்ரோபெரி, முளை கட்டிய தானியங்கள், எல்லாவகைக் கீரைகள்,பெரும்பாலான பச்சை நிறக் காய்கறிகள் முதலியவற்றிலும் விற்றமின் சி மிகுந்துள்ளது.

பழங்களிலேயே மிக அதிக அளவு விற்றமின் சி யைப் பெற்றிருக்கும பழம் கொய்யாப்பழம். 100கிராம் கொய்யாவில் 212 மில்லி கிராம் விற்றமின் சி உள்ளது. ஆகவே, தினமும் அரை கொய்யாப்பழம் அல்லது 50 மில்லி லீற்றர் தோடை /திராட்சைப்பழச் சாறு சாப்பிட்டு வந்தால் நமக்குத் தேவையான விற்றமின் சி கிடைத்து விடும்.

விற்றமின் சி செய்யும் மிக முக்கிய பணி குருதியில் புரோலீன் எனும் அமினோ அமிலத்திலிருந்து ஹைட்ராக்கி புரோலீன் எனும் வேதிப் பொருளைத் தயாரித்து அளிப்பது . இந்த வேதிப் பொருள் கொலாஜின் எனும் புரதம் தயாரிக்க உதவுகிறது.ஒரு கட்டடத்தில் செங்கற்களை ஒட்டவைக்கும் சீமெந்து செய்யும் பணி போல இந்த கொலாஜின் தான் உடலில் உள்ள எல்லா கலங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கொண்டு செயற்பட வைக்கிறது. இரத்தக்குழாய் திசுக்களை திடப்படுத்துகிறது. எலும்புத் திசுக்களை வலுப்படுத்துகிறது. பற்களையும் ஈறுகளையும் இணைத்துப் பாதுகாக்கிறது. உடலில் செங்குழியங்கள் உற்பத்தி ஆவதற்கும் உடல் திசுக்களில் இரத்தக் கசிவு உண்டாகாமல் பார்த்துக் கொள்வதற்கும் தசை நார்கள் வலுவுடன் செயலாற்று வதற்கும் கொலாஜின் தேவை. உடலில் விற்றமின் சி போதிய அளவில் இல்லையென்றால் கொலாஜின் உற்பத்தி குறைந்து •விடும். அப்போது மேற் கூறப்பட்ட பணிகளை உடலால் மேற்கொள்ள முடியாது. ஆகவே கொலாஜினுக்கு உயிர் கொடுப்பது விற்றமின் சி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விற்றமின் செய்யும் மற்றொரு அற்புதமான பணி உடலில் நோய்த் தடுப்பாற்றலை ஊக்குவிப்பது, உடலின் பாதுகாப்புப் படை என்று அழைக்கப்படும் வெண்குழியங்களைத் தூண்டி உடலில் புகும் அல்லது புகப்பார்க்கும் நோய்க்கிருமிகளுக்கு எதிராகப் போரிடும் திறனை வெண் குழியங்களுக்கு அளிப்பது விற்றமின் சி தான். இவ்வாறு உடலில் நோய்த்தடுப்பாற்றலை அதிகப்படுத்தி வைரஸ், பக்றீரியா போன்ற



தொற்றுக் கிருமிகளிடமிருந்தும் தமக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. குறிப்பாக அடிக்கடி சளி, தடிமன் போன்றவை நமக்குப் பிடிக்காமல் பார்த்துக் கொள்கிறது.

உடலில் ஏற்படும் காயங்கள், புண்கள், தீக்காயங்கள், அறுவைச்சிகிச்சைப் புண்கள் போன்றவை விரைவில் ஆறுவதற்கும் விற்றமின் சி உதவுகிறது. மேலும் இந்த விற்றமின் குருதிக் கொழுப்பைக் குறைத்து இரத்த அழுத்தம் அதிகமாகி விடாமல் பார்த்துக் கொள்கிறது. கொலஸ்ட்ரோலில் இருந்து பித்த அமிலங்களை உற்பத்தி செய்கிறது. சிறுநீரகத்தின் மேல் தொப்பி போல் அமைந்திருக்கும் அட்ரீனல் சுரப்பிகளின் பணியை ஒழுங்குபடுத்தி அவை ஓமோன்களை உற்பத்தி செய்வதற்கு உதவுகிறது.நாம் உண்ணும் உணவில் உள்ள இரும்புச்சத்து குடல் மூலம் இரத்தத்திற்கு வந்து சேர வேண்டுமானால் விற்றமின்-சி தேவை. செங்குருதி சிறு துணிக்கை முதிர்ச்சி நிலையை அடைய வேண்டுமானால் போலிக் அமிலம் தேவை.போலிக் அமிலம் உற்பத்தியாவதற்கு விற்றமின் சி தேவை. இதன் மூலம் இரத்த உற் பத்திக்கும் விற்றமின் சி உத வுகிறது.

தினமும் போதிய அளவுக்கு விற்றமின் சி யை உட்கொள்பவர்களுக்குப் புற்று நோய் வருவதில்லை என்று கண்டறியப் பட்டுள்ளது. மேலும் இந்த விற்றமின் கண்ணில் உள்ள வில்லையில் அதிக அளவில் சேமிக்கப்படுவதால் முதுமையில் கண் புரை நோய் வருவதையும் தடுக்கிறது.

நம் உடலுக்கு தேவைப்படுகின்ற விற்றமின் சி அளவு வயதுக்கு வயது மாறுபடுகின்றது. பச்சிளம் குழந்தைகளுக்கு 35 மில்லி கிராம், பத்து வய துக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு 45மில்லி கிராம், வளர் இளம் பருவத்தினருக்கு 50 மில்லி கிராம், பெரியவர்களுக்கு 60 மில்லி கிராம், கர்ப்பிணிகளுக்கு 80 மில்லி கிராம், பாலூட்டும் தாய்மார்களுக்கும் முதியவர்களுக்கும் 100 மில்லி கிராம் தேவை. இந்த அளவுக்கு விற்றமின் சி நமக்குக் கிடைக்கவில்லை என்றால் உடலில் பாதிப்புகள் ஆரம்பமாகும்.

விற்றமின் சி பற்றாக்குறையால் ஏற்படும் மனித நோய்களில் முதன்மையானது ஸ்கேர்வி (scurvy) நோய். பொதுவாக மனித உடலில் இரண்டு கிராமிலிருந்து மூன்று கிராம் வரை விற்றமின் -சி சேமிக்கப்பட்டிருக்கும்.இந்த சேமிப்பின் அளவு 300 மில்லி கிராமுக்கும் கீழ் குறைந்து விட்டால் ஸ்கேர்வி நோய் எட்டிப்பார்க்கும். ஸ்கேர்வி என்பது பல் ஈறு, தோல், இரத்தக் குழாய் ,எலும்பு முதலிய பல உறுப்புக் களைப் பாதிக்கின்ற நோய். இந்த நோயால் பாதிக்கப்படும் உறுப்பை பொறுத்து உடலில் அறிகுறிகள் தோன்றும் .

உடலில் விற்றமின் -சி பற்றாக்குறை ஏற்படும் போது முதலில் பாதிக்கப்படுவது இரத்தக்குழாய்கள்தான். அடுத்த வாரம் (தொடரும்)




# ஆளும் கூட்டணி கட்சிகளை சந்திக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் தினங்களில் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கட்சிகளை சந்திக்கவுள்ளார். இதன் போது வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து தீவிரமாக ஆராயப்படவுள்ளதாக அரசாங்கத் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆளும் கூட்டணிக்குள் பெரும்பாலான கட்சிகள் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இதற்காக அரசாங்கத்துக்குள் பிரச்சினையை ஏற்படுத்தவும் அக்கட்சிகள் முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் கூட்டணியில் உள்ள இடது சாரிக் கட்சிகள் தேர்தலை நடத்த ஆதரவை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறை கொண்டு வரப்பட்டதன் பின்னர் வடக்கு மாகாணசபைக்கு இம் முறையே முதல் தடவையாக தேர்தல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 'அசாத்சாலி மீது ஒரு கண்'

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியின் நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்தும் கண்காணிக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அசாத் சாலியின் நடவடிக்கைகளை புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டுமென இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு நேர் காணல் அளித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு அசாத் சாலி கைது செய்யப்பட்டிருந்தார்.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே இக் கருத்தை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இவ்வாறான கருத்துக்களைத் தான் வெளியிடவில்லை எனவும் குறித்த சஞ்சிகை திரிவுபடுத்திய செய்தியை வெளியிட்டதாகவும் அசாத் சாலி சத்தியக்கடதாசி மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். விடுதலை செய்யப்பட்ட போதிலும் அசாத் சாலியின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இவ்வருட போர் வெற்றி விழாவில் 11 ஆயிரம் படையினர் அணிவகுப்பு

அரசாங்கம் கொண்டாடிவரும் போர் வெற்றி விழா அணிவகுப்பில் இவ்வருடம் சுமார் 11 ஆயிரம் படையினர் பங்கேற்கவுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் பட்டதைக் கொண்டாடும் வகையில் எதிர் வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலி முகத் திடலில் நடக்கவுள்ள விழாவில் இலங்கையின் படைப்பலத்தை வெளிப்படுத்தும் வகையிலான பாரிய இராணுவ அணிவகுப்பு இடம் பெறவுள்ளது.

இதில் 6 ஆயிரத்து 350 இராணுவத்தினர், ஆயிரத்து 300 கடற்படையினர், ஆயிரத்து 300 விமானப்படையினர், ஆயிரத்து 400 பொலிஸார், 676 சிவில் பாதுகாப்புப் படையினர் என மொத்தம் 11ஆயிரம் படையினர் பங்கேற்கவுள்ளனர்.

இராணுவத்தின் போர்க்கலங்களின் அணி வகுப்பில் ஆட்லறிகள், பல்குழல் ரொக்கெட் செலுத்திகள், பொறியியல் வாகனங்கள், டாங்கிகள் உள்ளிட்ட 100 கவச வாகனங்களும் இடம்பெறவுள்ளன.

இலங்கை கடற்படையின் சார்பில் பீரங்கிப் படகுகள், அதிவேக தாக்குதல் படகுகள், சிறிய ஆரோ வகைப் படகுகள் உள்ளிட்ட 50 போர்க்கலங்கள் இந்த அணிவகுப்பில் பங்கேற்கவுள்ளன.

மேலும் விமானப் படையில் உள்ள போர் விமானங்கள், உலங்கு வானூர்திகள் உள்ளிட்ட 30 வான் கலங்களும் இதில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 241 இலட்சம் ரூபா செலவில் நி.அ.திணைக்கள கட்டடம் அமைப்பு

(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள நில அளவைத்திணைக்கள கட்டடம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இத் திணைக்களம் 241 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் திணைக்களத்தில் இம்மாவட்டத்திற்குரிய நில அளவை சம்பந்தமான வேலைகள் அனைத்தும் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள் தமக்கான தேவைகளை இத்திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

455



## என் புகழ் பாடுங்கள்

கலிங்க மன்னன் கத்தி யாயன் கடவுள் தனக்குக் காதுகளைக் கொடுத்தது, தன்னைப்பற்றி பிறர் புகழ்ந்து பேசுவதை கேட்பதற்காகவே என்று உறுதியாக நம்பினான். அதன் விளைவாக, சபைக்கு வருபவர்கள் அவனை வாயாரப் புகழ்ந்து விட்டு, தங்கள் பைகளை பொற்காசுகளால் நிரப்பிக்கொண்டு சென்றனர்.

ஒருநாள் கவுதமன் என்ற அயலூர்க்காரன் சபைக்கு வந்து மன்னனுக்கு பெரிய கும்பிடு போட்டுவிட்டு, மன்னனைக் கலியுகக் கர்ணன் என்றும் புகழ்ந்ததும், மன்னனின் உச்சி குளிர்ந்துபோய், அவன் எது கேட்டாலும் தருவதாகச் சொன்னான். கவுதமன் உடனே நான் வில் வித்தையில் மிகவும் கெட்டிக்காரன். என் விருப்பம் உங்கள் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவதே! என்ற சொல்ல, மன்னனுக்கு பயங்கர அதிர்ச்சி உண்டாயிற்று.

உடனே மந்திரி, கவுதமனைப் பார்த்து, நீ சிம்மாசனத்தில் அமர ஆசைப்பட்டால், நாளைக்கே அரன்மனை மைதானத்திற்கு வா! நான் சொல்லும் வித்தைகளில் வென்று காட்டு! என்றார். கவுதமனும் சம்மதித்தான்.

மறுநாள், அரன்மனை மைதானத்தில் மக்கள் கடலெனத் திரண்டனர். மந்திரி, கவுதமனுக்கு நூறு கஜதூரத்தில் ஒரு சிறுவனை நிறுத்தி வைத்து, அவ்ன் தலையில் ஒரு கொய்யாப்பழத்தை வைத்தார். பிறகு, கவுதமனைப்பார்த்து, நீ சிறுவனின் தலையில் உள்ள கெய்யாப் பழத்தை குறிபார்த்து அம்பெய்திப் பிளக்கவேண்டும். இது ஒருமுறை செய்தால் போதாது. மூன்று முறை செய்யவேண்டும்.! என்றார்.

அதைக்கேட்டு கவுதமன் வில்லில் அம்பினைப் பொரு



த்தி குறிபார்த்து, கணநேரத்தில் சிறுவனின் தலையில் இருந்த கொய்யாப்பழத்தை அம்பெய்து இரண்டாகப் பிளந்தான். உடனே, மந்திரி அதே போல், மற்றொரு சிறுவனை நிற்க வைத்து, அதே வித்தையை மீண்டும் செய்யச் சொன்னார். இரண்டாவது முறையும், கவுதமன் அனாயாசகமாக சிறுவன் தலையிலிருந்த பழத்தின் மீது குறிபார்த்து அம்பெய்திப் பிளந்தான்.

மூன்றாவது முறையாக சிறுவனை நிறுத்திய மந்திரி, அவனைக் கடைசி முறையாக அதே வித்தையைச் செய்யச் சொன்னார். வில்லில் நாணைப் பூட்டிய கவுதமன் திடிரென என்ன நினைத்தானோ தெரியவில்லை. என்னால் அம் பெய்த முடியாது. மன்னிக்கவும்! நான் இதிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்று குனிந்த தலையுடன் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

மன்னனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அடக்கமுடியாத மகிழ்ச்சியுடன், மந்திரியிடம் அதன் மர்மத்தை விளக்கச் சொல்லிக் கேட்டான். மந்திரி சிரித்துக் கொண்டே, முதலில் நின்ற சிறுவர்களும் யாரோ பெற்ற பிள்ளைகள்! அதனால் கவுதமன் தன் வித்தையைக் காட்டினான். மூன்றாவதாக நான் நிறுத்தியது. யாரோ பெற்ற பிள்ளையல்ல! கவுதமனின் சொந்த மகனே! சற்றே குறிதவறினால் என்ன ஆகும் என்று நினைத்த கணமே அவனுக்கு சர்வ நாடியம் ஒடுங்கி விட்டது. அதனால் ஒழுங்காக அவனே விலகிக் கொண்டான் என்றா.

மந்திரியின் புத்தி சாதுரியத்தை மனமாரப் பாராட்டிய மன்னன் அவருக்குப் பரிசுகளை வாரி வழங்கினான். அந்த சோதனையில் இருந்து, யாராவது தன்னைப் புகழ்ந்தால் மதி மயங்கிப் போவது எவ்வளவு முட்டாள் தனம் என்றும், அது ஒரு நாள் எத்தகைய ஆபத்தில் முடியும் என்று உணர்ந்து கொண்டான்.

## அம்புலிமாமா கதைகள்

தாத்தா சாய்வு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து. கொண்டதுமே அங்கு ஒரே ஆரவாரம் ஏற்பட்டது. வழக்கம்போல குழந்தைகள் அவரைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டன. இன்றைக்கு என்ன கதை தாத்தா? என்று கேட்க, அவரும் சொல்கிறேன் கேளுங்கள். என்று கதை சொல்ல ஆரம்பித்தார்.

நாம் எந்தவிதமான சத்தத்தையும் கேட்டு திடீரென பயந்துபீதி அடையக் கூடாது. அச்சத்தம் எங்கிருந்து எப்படி வருகிறதென தெரிந்தால் அநாவசியமாக நாம் பீதியடைய வேண்டியே இராது. இதற்கு சுமந்திரன் என்ற புத்திசாலியான மந்திரியின் கதையைக் கேளுங்கள்.

சக்கரபுரி என்னும் பட்டணத்தில் சக்கரவர்மனென்ற அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய மந்திரி தான் சுமந்திரன். அந்தப் பட்டணத்தை அடுத்து ஒரு மலை அருந்தது. அந்த மலையின் உச்சயிலிருந்து திடீர் திடீரென மணி அடிக்கும் சத்தம் கேட்கும். அதைக் கேட்டு நகர



மக்கள் பீதியுற்றனர்.

அதுமட்டுமல்ல அந்த மணி ஓசையைப் பற்றி பல கதைகள் கிளம்பின. ஒருவன் பிசாசு தன் ஆகாரத்தைப் பிடிக்குமுன் அடிக்கும் மணி என்றான். மற்றொருவனோ ஒரு ராட்சஸன் தான் மனிதவேட்டையாட புறப்பட்டு வந்து கொண்டிருப்பதை அறிவிக்கும் மணி என்றான், இப்படியாகப் பலர் பலவிதமாகத் தமக்குத் தோன்றியதைக் கூறினர்.

மக்கள் பீதியடைந்துள்ளதை மந்திரி மன்னனிடம் கூறினான். அப்போது மன்னனும் ஆமாம் அதற்கு என்ன செய்வது என்று தானே யோசித்துக்கொண்டே இருக்கிறேன். இப்படியே பேசாதிருந்தால் நாளா வட்டத்தில்

## மணியோசை

மக்கள் யாவரும் இந்த ஊரை விட்டு ஓடிவிடுவார்கள் போலிருக்கிறதே. இந்த மணியோசைக்கு உண்மையான காரணம் என்ன என்பதை அறிந்தால் அதைப்போக்க நாம் வழிதேடுவோம் என்று கூறியதும், உடனே சுமந்திரனும் தான் அது விடயமாகப் பரிசீலனை செய்யப்போவதாகக் கூறி அரசனின் அனுமதி பெற்றுச் சென்றான். அவன் மலை உச்சியை அடைந்ததும் அங்கு ஒரு குரங்கின் கையில் மணி இருப்பதையும், அது அடிக்கடி அதனை ஆட்டிக்கொண்டு இருப்பதையும் கண்டான்.

உடனே, ஒரு சில பழங்களைப் பறித்து வந்து சுமந்திரன் குரங்கிற்கு எதிரே வைக்கவே, குரங்கு மணியை பொத்தெனப் போட்டுவிட்டு பழங்களின் மீது தாவியது. மந்திரி அந்த மணியை எடுத்துக்கொண்டு தலைநகருக்குத் திரும்பினான். மணியை மந்திரி, மக்கள் நிறைந்த சபையில் காட்டி இது அந்த குரங் கிற்கு எப்படியோ கிடைத்திருக்கிறது. எனவே அது வேடிக்கையாக அவ்வப்போது ஓசைப்படுத்தி மகிழ்ந்து வந்திருக்கிறது. அது மகிழும் போதெல்லாம் நம்மக்களின் மனம் பீதியடைந்து வந்தது. இனிமேல் மணியோசையும் கேட்காது. நீங்களும் அனாவசியமாக பயப்பட வேண்டியும் வராது, என்றான். அதுவே உண்மையென மக்களும் அறிந்து கவலையையும், பீதியையும் விட்டு ஒழித்தனர்.

தாத்தா கூறிய இக்கதையைக்கேட்டு குழந்தைகள் பேஷ், பேஷ் ரொம்ப நன்றாக இருக்கிறது கதை, என்று கூவிக்கொண்டே கும்மாளம் போட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் சித்தர் பெருமானை



03 அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

என் தொந்தரவு தாங்க முடியாமல் போட்டோவை நாளை தருகிறேன் என்று கூறிப்போனவருக்கும் ஒரு அனுபவம் ஏற்பட்டது. அவர் ரோலைக் கழுவுவதற்கு கேமராவிலிருந்து எடுக்கும்போது, அது தவறி விழுந்து எக்ஸ்போசாகி எந்த படமும் வரவில்லை.

உடனே ஓடி வந்து சித்தரை பார்த்தார். அதற்கு சித்தர், என்னப்பா சினிமாக்காரர்களான உங்களால் என்னுடைய ஒரு போட்டோவைக் கொடுக்க முடியவில்லையா? என்று சிரித்துக்கொண்டே கேட்டார். ஒரு நாள் சென்னையில் சித்தர் தங்கியிருந்த சமயம் அவருடன் தனிமையாக இருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் அமைந்தது. அப்போது சித்தர்பெருமான் கஞ்சா புகைத்துக் கொண்டு இருந்தார். வழக்கம் போல விரல்களால் கனலை சிலும்பிக்குள் அழுத்திக் கொண்டிருந்தார்.

சித்தர் அவர்கள் அடிக்கடி கஞ்சா புகைப்பார்! ஒரு மணத்தியாலத்தில் 1கி கஞ்சா புகைத்து முடிப்பார். கஞ்சா சிலும்பியில் கனறும் நெருப்பை தம் விரல்களால் ஏதோ பஞ்சை அழுத்துவது போல் அழுத்துவார். இதைக்கண்டு நான் வியந்து போவேன்! ஒரு வேளை, இப்படி கஞ்சா குடித்தால் நாமும் சித்தராகி விடலாமோ! ன்றெல்லாம் அவர் புகைப்பதை கண்டு நான் சிந்தித்தது உண்டு. இதைக்கண்ட பிறகு என்னால்,என் ஆவலை அடக்க முடியவில்லை சாமி கை சுட வில்லையா? என்று கேட்டேன். வேண்டுமானால் நீங்களும் அழுத்திப் பாருங்கள். என்று கூறி புன்னகை செய்தார். என்னால் முடியாது கை பழுத்திடும் என்றேன். அதற்கு அவர்கோவில்களிலே தீ மிதிக்கின்றார்களே அவர்களுக்குச் சுடாதா? என்று கேட்டதும் எனக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. அதனால் அடுத்த கேள்விக்கு தாவினேன். கஞ்சா பிடிப்பது சட்டப்படி குற்றம் இல்லையா? என்று பயந்து கொண்டே கேட்டேன். அதைக்கேட்டு சிரித்தவர், இந்தச் சட்டம் உங்களுக்குத்தான் என்றார்.இது உடல் நலத்திற்கு கேடுன்னு சொல் வாங்களே? ஆமாம்,சாதாரண மனிதனுக்கு இது தீங்குதான் செய்யும். காரணம் அவன் அதை போதைக்காகவே பயன் படுத்துகின்றான்.

நாளடைவில், மெல்ல மெல்ல அதற்கு அவன், அடிமையாகி விடுகின்றான். போதை அவன் மூளையை ஸ்தம்பிக்கச் செய்து விடுகின்றன அதனால் போதையில் என்ன செய்கின்றோம் என்றே உணராமல், பல தவறுகளை செய்கின்றான். போதைப் பழக்கம் உள்ளவனுக்கு, பெண் உடல் சம்பந்தம் கூடவேகூடாது. இது இளைஞர்களை நரம்பு தளர்ச்சிக்கு ஆளாக்கி விடும்.

போதையில் இருப்பவன் எண்ணப்படி இயங்க, உடல் மறுக்கும். சிந்தித்து ஒரு முடிவெடுப்பதற்கு இயலாமல் நாளடைவில் அவன் சிந்தனைப் பகுதியே சிதைந்து விடும். அதோடு ஒரு முக்கியமான விடயம், இதை புகைபிடிப்பவர்களிடமிருந்து, மகாலட்சுமி கடாட்சம் மறைந்துவிடும். தரித்திரம் பற்றிக்கொள்ளும். கையில் காசு வராது. வந்தாலும் தங்காது. கண் பார்வை கடைசியில் காணாமல் போகும். உடல் உஷ்ணம் உக்கிரமாகும். இறுதியில் பாடுபட்டு வளர்த்த உடல் பாழ்பட்டு உயிரிழப்பான்! என்றார் சித்தர். இதைக்கேட்டு பிரமித்த நான், ஒருவாறு துணிந்து ,சாமி! உங்களுக்கு இதெல்லாம் ஏறபடாதா? என்று கேட்டேன். அதைக் கேட்டவர் சற்று கண்மூடி மௌனமானார்.



பின் சிறிது நேரம் கழித்து மௌனம் கலைந்தார். ராஜ்குமார் கஞ்சா தேவ மூலிகை! அதை சித்தர்கள் சிவ மூலிகை, உயர்ந்த பொருள் பயபக்தியுடன் அழைப்பார்கள். இது ஞானம் சம்பந்தப்பட்டது. மலைகளில் வாழும் சித்தர் பெருமக்கள், இதை போதைக்காக, புகைப்பது இல்லை. இதை மனதை ஒருமைப்படுத்தி ஞான நிலை அடைய, ஒரு சாதனமாகத் தான் உபயோகிக்கிறார்கள் அதனால், இதை புகைக்கும்போது, அவர்கள் உடலில் மாபெரும் தெய்வீகசக்தி தோன்றுகிறது. அவர்கள் யோக நிலையில் தெய்வத்துடன் ஒன்றுகிறார்கள். புகைப்பதால் ஏற்படும்

உஷ்ணம், அவர்களை ஒன்றும் செய்யாது, என்று கூறினார், இதைக் கேட்ட நான் நாமும் புகைக்கலாமே, என்றெழுந்த எண்ணத்தை 'மனதிலிருந்து துடைத்தெறிவது போல், அந்த மகான் கால்களில் வீழ்ந்து வணங்கினேன்.

(தொடரும்)

# சிங்கள, பௌத்த பேரினவாதம் நல்லது செய்யுமா?

எந்தவொரு சமுதாயச் சிக்கலை ஆராய்ந்தாலும் அதை திட்டவட்டமான ஒரு வரலாற்று வரம்புக்குள் வைத்து ஆராய வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பற்றியதாயின், அதே வரலாற்றுக் காலகட்டத்தில் இருக்கிற அந்த நாட்டைப் பிறநாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற தனித்தன்மைகளை கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும் என்று லெனின் அறிவுறுத்துகிறார்.

இந்த அடிப்படையில் இலங்கையைப் பரிசீலித்தால், ஈழத்தமிழர் பிரச்சினையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுப்பது சிறுபிள்ளைத்தனமான நிலைப்பாடு என்பதைப்புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையின் இன்றையச் சூழலில் அங்குள்ள தமிழர்களுக்கு தேவைப்படுவது சமவாய்ப்பும்,அந்தஸ்தும் உள்ள குடிமக்களாக அவர்கள் நடத்தப்படுவதே ஆகும்.

அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக அதிகாரப் பரவல் உறுதி செய்யப்படவேண்டும்.

மறு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாட்டுக்கான ஏற்பாடுகள் துரிதமாகப் பூர்த்தியாக வேண்டும்.

தமிழர்கள் வாழும் பகுதியில் இருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் நடந்த கடுமையான மனித உரிமை மீறல் போர்க்குற்றங்களுக்கான பொறுப்பாளிகள் அடையாளம் காணப்பட்டு உரியதண்டனை வழங்கப்படவேண்டும். இதற்கு நம்பகத் தன்மையுடன் கூடிய் சுயேச்சையான உயர் மட்ட விசாரணை நடத்த இலங்கை அரசு முன்வரவேண்டும் என்கிறது.

வேண்டும், வேண்டும், வேண்டும்... என்று அடுக்கிக்கொண்டே போவது அனைத்தும் அவசியமானவையே. இதைச்செய் என்று அவர் கோரிக்கை வைப்பது, இத்தனை அட்டூழியங்களையும் யார் செய்தார்களோ... அவர்களிடம், அதாவது, இறுக்கமாக இருக்கும் பௌத்த ,சிங்களப் பேரினவாதம் இவற்றை எல்லாம் செய்து தரும் என்று நம்புவது யதார்த்தம் உணராப்போக்கு.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கொடூரங்களைச் செய்து ஒரு சிறு குழு அல்ல. ஏதோ ஒருசில அரசியல் கட்சிகள் அல்ல. குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் ஆண்ட ஏதோ சில ஆட்சியாளர்கள் அல்ல. தமிழர் உரிமைக்காக அமைப்புகள் தொங்கப்பட்டபோது, இந்தத் தாக்குதல்களும் ஆரம்பிக்கப்படவில்லை.



தனித் தமிழ் ஈழம் கேட்டு ஆயுதப் போராட்டம் தொடங்கிய பிறகு இத்தகைய எதிர்த்தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படவில்லை காலம் காலமாகத் திட்டமிட்டு நடத்தப்படும் இன வெறுப்புத் தாக்குதல்கள் இவை.

கடந்த 70 ஆண்டு காலமாக சிங்கள இனம்,சிங்கள மொழி,பௌத்த மதம், சிங்கள - பௌத்த கலாசாரம் ஆகிய நான்கும் அங்குள்ள கட்சிகளில், அங்கு அமைந்த ஆட்சிகளில், மதத்தில், மக்கள் மனத்தில் செலுத்தப்பட்டு மொத்தமும் கான்சரைப்போல அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி நிற்கிற ஓர் அரச பயங்கரவாதத்திடம்... அது வேண்டும், இது வேண்டும்...என்றால் நடக்குமா?

சிங்களப் பேரினவாதம் இதையெல்லாம் செய்து கொடுக்கும் என்று நம்புவதே, இலங்கையின் அரசியல் முன் வரலாறு புரியாதவர் பேசுவது.

பிரிட்டிஷ் ஆதிக்கம் பரவித் தொடங்கிய போது ஏற்பட்ட சமூகக் கலாசார மாற்றங்களை எதிர்கொள்ள, சிங்கள பௌ்த்த தேசியம் புத்துயிர் பெற்றது. மொழி,மதம் மூலம் தங்கள் தனித்துவத்தை நிலைநாட்டத் துடித்தனர். சிங்கள, பௌத்த பாரம்பர்யத்தின் அடிப்படையில் ஒரு பொது நல அரசு அமைப்பதற்காகவே, பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களை ஒன்று சேர்த்தனர்.

உலகமக்களில் இருந்து சிங்களவர்கள் வேறுபட்டவர்கள், அவர்களே இலங்கை மண்ணுக்குரியவர்கள், அவர்களே இம்மண்ணில் வாழத் தகுதியுடையவர்கள் என்ற மகாவம்சப் பழைமைவாதத்தை மீட்டெடுத்தனர். சுற்றியுள்ள இனங்கள் இந்த நாட்டைக் கைப்பற்றும் ஆபத்து உண்டு, எனவே நம் இனம் அழிக்கப்பட்டு விடும் என்று தொடர்ந்து பயந்தனர்.

நமது பௌத்ததர்மம் முக்கியம். இதனால் தான் நாடு காப்பாற்றப்பட்டு வந்துள்ளது, உலகில் பௌத்ததர்மத்தை பேணிவளர்க்கும் பொறுப்பு சிங்கள பௌத்தத்திடமே தரப்பட்டுள்ளது என்று நம்பினர். சிங்கள மன்னன் துட்டகைமுனுவுக்கும் தமிழ்மன்னன் எல்லாளனுக்கும் நடந்த சண்டையைச் சொல்லி, சிங்கள இனவாதத்தை வளர்த்தெடுத்தனர்.

மூன்றில் இரண்டு பங்கு சிங்கள மக்கள் வாழ்ந்தாலும், நிலங்கள் முழுமையாக தங்கள் இனத்திடம் இல்லை என்ற நெருடல் சிங்கள இனவாதிகளிடம் இருந்தது. எங்கெல்லாம் தமிழ்ச்சிறு பான்மையினர் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் பெரும்பான்மை சிங்களவர்களை குடியேற்றும் திட்டத்தை 1931ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டனர்

இலங்கையில் அமைந்த முதல் அமைச்சரவையில் நில அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்க தன்னுடைய நயவஞ்சகத்தால் சிறுகச் சிறுகக் கபளீகரம் செய்யத் தொடங்கினர். இன்று, மஹிந்த ராஜபக்ஷ அதை முழுமையாகச் செய்து முடித்தார். பிரிட்டிஷ் ஆட்சியிலே நில கபளீகரம் செய்தவர்களிடம் அதிகாரமும் தரப்பட்டால், என்ன ஆகும்?

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிறகு, அமுலான திட்டங்கள் அனைத்தும் நில அபகரிப்புகளாகவே அமைந்தன. சிங்களக் குடியேற்றம் பட்டவர்த்தனமாக நடந்தது. தமிழர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்ற பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் சொன்னாலும் அது அமுலாகவில்லை. இப்படி குடியேற்றப்படும் சிங்களவருக்கும்,அதுவரை அங்கு வாழ்ந்து வந்த தழிழர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இது தான் ஈழப்பிரச்சினையின் தொடக்கம்.

இந்த இனவாதத் தீயில் எண்ணெய் வார்க்க சிங்கள அரசியல் வாதிகள் துடித்தனர், டி.எஸ்.சேனநாயக்கவின் ஜக்கிய தேசியக் கட்சியில் இருந்து எஸ.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க பிரிந்து தொடங்கியதுதான் இலங்கை சுதந்திரக் கட்சி. கடந்த 60 ஆண்டுகளை மாறிமாறி ஆண்டவர்கள் இந்த இரண்டு கட்சியினர்தான்.

-விகடன்-

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து பால்மா வகையில் கதிர்வீச்சு தாக்கம் கிடையாது

## நுகர்வோர் பாதுகாப்புச் சபை தெரிவிப்பு

நியூசிலாந்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்துள்ளனவா? என்பது தொடர்பிலான ஆய்வு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

ஏற்கனவே இது தொடர்பில் கண்டறிவதற்காக சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பால்மா மாதிரியின் அறிக்கை இலங்கைக்கு கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் இன்று செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டுக் குழுவுடன் நடைபெறவுள்ள சந்திப்பின் போது இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அமைச்சின் மேற்படி குழு அறிக்கை தொடர்பிலான உண்மை நிலைமையை ஆராய்ந்து விரைவில் தெரியப்படுத்துமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பில் பொது மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டுக்குழு விரைவில் இதன் உண்மை நிலையைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவித்தார்.

நியூசிலாந்தில் கறவைப் பசுக்கள் பயன்படுத்தும் புல்தரைக்கு டி.சி.டி என்னும் இரசாயனம் விசிறப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை உட்கொண்ட கறவைப் பசுக்களிலிருந்து பெறப்பட்ட பாலில் தயாரிக்கப்பட்ட பால்மா, இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கத்தைக் கொண்டிருப்பதாக ஒருசில நாடுகள் ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து நியூசிலாந்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவிலும் இவ்வாறான இரசாயனத் தாக்கம் இருக்கக் கூடுமா? என்ற சர்ச்சை எழத் தொடங்கியது. இதன் உண்மை நிலையைக் கண்டறிவதற்காகவே இதன் மாதிரிகள் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருப்பது போல் நியூசிலாந்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் எவ்வித கதிரியக்கத் தாக்கமும் இல்லையென இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரஞ்சித் லக்ஷ்மன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான கதிர் இயக்கத் தாக்கம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் நாம் அதனை ஒருபோதும் நாட்டுக்குள் அனுமதிக்க சுங்க அதிகாரிகளுக்கு இடமளித்திருக்கமாட்டோமெனவும் அவர் விளக்கமளித்தார்.

எது எப்படியாயினும், இலங்கையிலுள்ள நடைமுறை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் நுகர்வுக்கு ஏற்புடையதல்லாத கதிரியக்கம் கலந்திருக்கிறதா என்பது தொடர்பில் அணுசக்தி அதிகார சபை நடத்திக் கொண்டிருக்கும் பகுப்பாய்வுகளை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டவர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாம் நம்முடைய கடமையைச் சரியாகச் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள மாட்டோம் என்றும் அவர் கூறினார். இலங்கைச் சட்ட விதிகளின்படி பால்மாவில் 20 சதவீத கதிரியக்கம் மாத்திரமே இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

## பிரிவினையுடன் தேர்தல் வேண்டாம்


பிரிவினை வாதத்துடன் கூடிய வடக்குத் தேர்தல் வேண்டாம் என்ற தொனிப் பொருளில் நாட்டு மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை 3.00 மணியளவில் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இதற்காக 10 இலட்சம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. இந்த வேலைத் திட்டம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-2)

## ஹெரோயின் வைத்திருந்த பெண்ணொருவர் கைது

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கொட்டாவ ருக்மலே பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நேற்று முன்தினம் இரவு குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தப் பெண்ணிடமிருந்து 2 கிராம் 330 மில்லி கிராமம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். (அ-2)



திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்களுக்கான அரங்கத்திறன் விருத்தி நாடகப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு அண்மையில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றபோது....

# ஆபிரிக்க நாடுகளின் பக்கம் திரும்புகின்றது இலங்கை

ஆபிரிக்க நாடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தினால் இலங்கைக்கு பல அனுகூலங்கள் கிடைக்க வாய்ப்பு இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உகண்டா சென்றுள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமது வெளிநாட்டுக் கொள்கைகளின் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்களை ஆபிரிக்க நாடுகளில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இந்த நாடுகளுடன் உறவினை பேணுவதால் இலங்கைக்கு எந்த நன்மையும் கிட்டுவதில்லை.

எனினும், ஆபிரிக்க நாடுகள் இலங்கையின் நலனில் அக்கறை கொண்டிருப்பதாகவும் இந்த நாடுகளுடன் உறவை நீடிப்பதன் ஊடாக இலங்கை சிறந்த அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# மகாசேன் புயலால் இலங்கைக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்

## காலநிலை அவதான நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தென்மேற்கே உருவாகியுள்ள மகாசேன் என்ற புயல் சின்னமானது இலங்கைக்கு இன்னும் அச்சுறுத்தலாகவேயுள்ளதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

குறித்த புயல் சின்னமானது முல்லைத்தீவில் இருந்து 600 கிலோமீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது. இது இலங்கையின் வடமேல் திசை நோக்கி நகர்ந்து வருகின்றது.

இதனால் இலங்கையின் காலநிலையில் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் இரண்டொரு நாட்களில் இந்தப் புயல் இலங்கையின் வடபகுதியை கடுமையாக தாக்கும் வாய்ப்பும் இருப்பதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு கடற்பகுதியில் மீன்பிடிப்பதைத் தவிர்க்கும் படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இறுதி ஆட்டத்திற்கு தெரிவானது மாலுசந்தி மைக்கல் அணி

(கரவெட்டி)

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்திற்கான பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் நியூபவர் அணியை ஒரு விக்கெட்டினால் தோற்கடித்து மாலுசந்தி மைக்கல் அணி இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியது.

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த 32 கழகங்கள் பங்குபற்றின.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மைக்கல் அணித் தலைவர் எஸ். தர்ஷன் தமது அணி சார்பாக களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் நியூபவர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அருண் 20, காந்தரூபன் 16, கிரிஷாந், சிலோஜன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

மைக்கல் அணி பந்து வீச்சின் சார்பில் தர்ஷன், ரகுவரன் தலா 3, அச்சுதன் 2, தினோஜன், வேணுகானன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி பிபீலிகனின் அதிரடி ஆட்டத்தில் பரபரப்புக்கு மத்தியில் ஒரு விக்கெட்டினால் வெற்றி பெற்றது. இதில் 18.4 பந்துகளில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் பிபீலிகன் 35, ரகுவரன் 16, தர்ஷன் 14, தினோஜன் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

அல்வாய் நியூபவர் அணியின் பந்து வீச்சின் சார்பில் நிபந்தன் 4, ராம், சிலோஜன் ஆகியோர் தலா 2, காந்தரூபன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியில் அல்வாய் நியூபவர் அணியை ஒரு விக்கெட்டினால் தோற்கடித்து மாலுசந்தி மைக்கல் அணி இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியது. (அ-3-24)

# முஸ்லிம் காங்கிரஸார் திறமையான நடிகர்கள்

## பைசர் எம்.பி. குற்றச்சாட்டு

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலுள்ள சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தாங்கள் அரசாங்கத்திலிருந்து விலகப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு நாடகமாடுகின்றனர் என பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவர்கள் இப்படியே கூறிக்கொண்டிருப்பதை விடுத்து விலகுவதாயின் உடனேயே சென்றுவிடவேண்டும். தெருநாய் தனது வாலை ஆட்டும் திசையில் போவதில்லை. அதுபோன்றே சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று அரசாங்கத்தை விட்டு விலகப் போகிறோம் என கூறிக்கொண்டு நன்றாக நாடகமாடுகின்றனர்.

அரசாங்கத்துடன் உள்ள சில முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் நாங்கள் அரசாங்கத்தை விட்டு விலகப் போகிறோம் எனக் கூறுகிறார்கள். ஆனால், அரசின் அனைத்து வரப் பிரசாதங்களையும் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டு அரசுடன் ஒட்டிக்கொண்டேயிருக்கின்றனர்.

இவ்வாறானவர்கள் தங்களது கட்சியின் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டு அரசுடன் இருக்கவேண்டும், அல்லது அரசாங்கத்தை விட்டு விலகிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**பத்தாமிடத்தில் வரும் குருவால் பதவியில் மாற்றம் உருவாகும்!** **50/100**

**பதுமையாக வாழாமல் புதுமையாக வாழ வேண்டுமென்று விரும்பும் கன்னி இராசிநேயர்களே!**

குதூகலத்தைத் தரும் குருப்பெயர்ச்சி இப்பொழுது வந்துவிட்டது. ஆனால், வருகிற குரு பத்தாம் இடத்திற்கு அல்லவா வருகிறது. முத்தான இடம்தான் பத்தாமிடம் என்றாலும் பதவியில் மாற்றம் தரும் என்று வர்ணிக்கப் படுகிறது.

பதவி மாற்றம் ஏற்படும் என்பதல்ல. ஊர் மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றம், உத்தியோக மாற்றம், நாடுமாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றில் ஏதேனும் ஒரு இனியமாற்றம் தந்து பார்வை பலத்தின் மூலம் பணத்தேவைகளையும் இந்த குரு பூர்த்தி செய்யப்போகிறார்.

ஏழரைச் சனியின் பிடியில் சிக்கியிருக் கும் உங்களுக்கு எத்தனையாவது சுற்று நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள் ளுங்கள். முதல்சுற்றாக இருந்தால் முற்றி லும் மாற்றம் வந்து சேரும். இரண்டாவது சுற்றாக இருந்தால் எடுத்த முடிவுகள் அனைத் தும் வெற்றி பெறும். மூன்றாவது சுற்றாக இருந்தால் முக்கிய புள்ளிகளை சந்தித்து முடிவடையாத காரியங்களை முடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் படியான நிலை உருவாகும்.

அதே நேரத்தில் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய மூன்று இடங்களில் பதிவாகிறது. எந்தெந்த ஸ்தானங்களை எல்லாம் குரு பார்க்கிறாரோ அந்தந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அதுவரை கொடுக்காம லிருந்த யோகங்களைகூட குரு பார்க்கும் காலத்தில் கொடுப்பார் என்று ஜோதிட சாஸ் திரம் கூறுகிறது. ஆனால், சுய ஜாதகத்தில் குரு பகை வீட்டில் இருந்தாலோ, பகைக் கிரகத்துடன் கூடி இருந்தாலோ, வக்ர இயக் கத்தில் இருந்தாலோ செயற்படத் தாமதமாக லாம். அதுபோன்ற குரு வலுவிழந்து ஜாத கத்தைப் பெற்றவர்கள் குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று முறையாக வழிபட்டு வந்தால் முன்

எனவே தாயாலோ, தாரத்தாலோ, தங்கை யாலோ, தன்னோடு தொழில் புரியும் தோழி யாலோ பிரச்சினைகள் உருவாவது இயற்கை தான். பட்டம்பெற்றவர்கள்சொல்லும்யோசனை களைக் காட்டிலும் உங்கள் யோசனைகள் சிறப் பாக இருக்கும் என்பதால், படித்த அறிஞர் பெரு மக்கள்கூட உங்களிடம் பலவிதமான சந்தேக ங்களைக் கேட்டுத் தெளிவு செய்துகொள்வர்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படி அமையப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப் போம்.

**பத்திலே குருவும் வந்தால் பதவியில் மாற்றம் தோன்றும்! முத்தான வாழ்வில் நாளும் முன்னேற்ற தடைகள் கூடும். கொத்தோடு துயரம் தீர குருவினை வண ங்கவேண்டும்! தத்தளிக்கின்ற உள்ளம் தானாக அமைதி காணும்! என்று ஜோதிட** சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, தொழில் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு, சுயஜாதகத்தில் திசாபுத்தி பலமிழந்தவர்களுக்கு தொழில் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றங்களை உடன டியாக வழங்கலாம். மற்றவர்கள் பயப்படத் தேவையில்லை. அரசியல்வாதிகள் புதிய பொறுப்புகளையும், பதவிகளையும் பெற இந்த குருவழிவகுப்பார்.

செயல் ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கும் காலங்களில் நீங்கள் செய்யும் செயல்களில் காணப்படும் இடையூறுகள் அகலும். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் அலைமோதும். கூட்டுத்தொழில் செய்பவர்களிடையே மனக் கசப்பு உருவாகலாம்.பணியாளர்கள் உங் களை விட்டு விலகும் சூழ்நிலை உண்டு.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல திகாரிகளின் ஆதரவு குறையும். அலுவலகத் திலும் நிம்மதி இல்லை. வீட்டிலும் நிம்மதி இல்லை என்று அங்கலாய்ப்பீர்கள்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை.**

குரு பத்தாமிடத்தில் இருந்து கொண்டு அதன் பார்வையை 2, 4, 6 ஆகிய இடங் களில் பதிவு செய்கிறார். வாழ்வில் செல்வச் செழிப்போடு சுகங்களையும் சங்தோஷங் களையும் அனுபவிக்க வேண்டுமானால் குரு

## கன்னி



குருவால் குடும்பத்தில் அமைதி கூடும். குடும் பத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சுபகாரிய பேச்சுக்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். பொதுவாக வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், வாகனம், எதிர்ப்பு, வியாதி, கடன், உத்தி யோகம், தொழில் ஆகிய அனைத்து வழிகளி லும் நீங்கள் எதையெதை எதிர்பார்த்து காத் திருந்தீர்களோ, அவற்றை எல்லாம் வழங்கி ஆச்சரியப்பட வைக்கப்போகிறது.

தாராளமாகச் செலவிட ஏராளமான தொகை யும் வந்துகொண்டே இருக்கும். ஒரு காரியத் தைச் செய்ய பணத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று இனி நினைக்க வேண் டாம். காரியத்தை தொடங்கிவிட்டால் காசு, பணம் தானே வந்து சேரும்.

குடும்பப் பொறுப்புகளை அதிகமாக ஏற்றி ருக்கும் நீங்கள், கடுமையாக பிரயாசை எடுத் தும் இதுவரை முடிக்க முடியாத காரியங்களை எல்லாம் இப்பொழுது எளிதில் முடித்து விடு வீர்கள். இந்த நேரத்தில் இனத்தார் மற்றும் உறவினர்களின் பகை கூட மாறலாம். குணத் தோடு பழகும் நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பங்காளிகள் பக்கபலமாக இருக்க, பாதி யில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். தாயின் உடல்நலம் சீராகும். கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். படிப்பில் இருந்த தடை அகல திசாபுத்திக்கேற்ற தெய்வவழிபாடுகளை தேர்ந்தெடுப்பதோடு கலைமகளையும் கை கூப்பி வணங்குங்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும். கட்டிய வீடாக வாங்க நினைப்பவர்களுக்கும் எதிர் பார்த்த தொகைக்கே இல்லம் கிடைக்கும்.

ஆறாமிடத்தில் குருவின் பார்வை பதிவ தால்எதிரிகள் உதிரிகளாவர். இதுவரை தொல்லை கொடுத்து வந்தவர்கள் தோள் கொடுத்துத வுவர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங் கள் இதயம் மகிழும் விதத்தில் வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணி யாக இருந்து ஆதரவுக்கரம் நீட்டுவர்.

**அக்கறை செலுத்தவேண்டிய வக்ர காலங்கள்!**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013 முதல் 12.03.2014 வரை வக்ர கதியில் இயங்கு கிறார். இந்த வக்ரம் உங்கள் இராசி அடிப்படை யில் பார்க்கும் பொழுது நல்ல பலன்களையே வழங்கும். உங்கள் சுயஜாதகத்தில் குரு வக்ர கதியிலேயே இருக்குமானால் இக்காலம் உங் களுக்குப் பொற்காலமாக அமையும். கேந்தி ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் யோகம் செய்ய வேண்டுமானால் வக்ரகதியில் இயங்கும் பொழுதுதான் அந்த யோகத்தைச் செய்யும்.

எனவே, சோர்வுகள் அகன்று துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தூரதேசப் பயணங் களில் இருந்த தடை அகலும். நல்ல காரியங் கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி கள் தோன்றும்.

நண்பர்கள் மற்றும் உறவினர்கள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவார்கள். கூட்டு முயற்சிகளில் இருந்துவிடுபட்டு தனித்தியங் கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாக னங்கள் வாங்கும் சிந்தனை இப்பொழுது வெற்றிபெறும். பிரிந்து சென்ற வாழ்க்கைத் துணை மீண்டும் இணைந்து பிரியத்தைக்

# பத்தாமிடத்தில் குருதான் வந்தால் பல இனிய மாற்றங்கள் ஏற்படும்

னேற்றங்கள் வந்து சேரும்.

**வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை மறக்கமாட்டீர்கள்!**

நீங்கள் வரவறிந்து செலவு செய்வீர்கள். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்; வளர் ச்சிக்கு வித்திட்டவர்களிடம் நன்றியுடன் நடந்து கொள்ளவேண்டும். பழைய சடங்கு, சம்பிர தாயங்களில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களே நீங்கள். கன்னி ராசியில் பிறந்தவர்களுக்குக் கன்னி யால் கவலை என்பது ஒரு பழமொழி.

2,4 ஆகிய இடங்களை பார்க்க வேண்டும். அந்த அமைப்பு உங்களது சுயஜாதகத்தில் இல்லாவிட்டாலும் தற்சமயம் அதன்பார்வை பதிவதால் யோகங்கள் ஏற்படும்.

**இரண்டினை குருதான் பார்த்தால் இல்லத்தில் அமைதி கூடும்! நான்கினை குருதான் பார்த்தால் நல்லதோர் சுகங் கள் வாய்க்கும்! ஆறினைக் குருதான் பார்த்தால் அகிலத்தில் கடன்கள் தீரும்!** என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே இரண்டாம் இடத்தைப்பார்க்கும்


காட்டும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

புதன்கிழமை தோறும் விஷ்ணுவையும் இலக்குமியையும் வழிபட்டு வருவதோடு சிவால யங்களுக்குச் சென்று சிவனையும் உமாதேவி யையும் வழிபட்டு அங்குள்ள அருள்தரும் தட்சிணாமூர்த்தியையும் நந்தியெம்பெருமா னையும் வழிபட்டு வாருங்கள். பொருள்வளம் பெருகும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!**

கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு



**28.05.2013 - 12.06.2014**

| | | | |
|---|---|---|---|
| | கேது | செவ்வாய் சூரியன் சுக்ரன் | புதன் வியாழன் |
| | **குருப் பெயர்ச்சி 28.5.2013** | | |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | |

***சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருக சீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத் தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.***

**குருவின் வக்ரகாலம்**

**13.11.2013 முதல் 12.03. 2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகி றார்.**

இந்த குருப்பெயர்ச்சி வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்கும். பத்தில் குரு சஞ்சரிப்பதால் இடம்மாற்றம், வீடு மாற்றங் கள் ஒருசிலருக்கு உருவாகலாம். வெளிப் படும் வார்த்தைகளால் விரோதங்கள் உருவாக லாம். அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள அதிக விரயங்கள் ஏற்படும். தன ஸ்தானம் பலப்படுவதால் உடனுக்குடன் பணத்தேவைகள் பூர்த்தியாகும். என்றாலும் ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவ தால் ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். ஆரோக்கிய பாதிப்புகள் அகலும். மருத்துவ செலவுகள் குறையும். வாக்கு சாதுரியத்தால் வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள் வீர்கள். கணவன்– மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குருவின் வக்ர காலம் பொற்கால

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**


மாகவே அமையும். அக்காலத்தில் தாய்வழி ஆதரவு பெருகும். உடன்பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவர். குருவழிபாட்டை முறையாக மேற்கொள்வதன்மூலமும் இரண்டாம் இடத்து இராகு அஸ்தமத்து கேதுவின் ஆதிக்கத்திற்கு சர்ப்ப சாந்திகள் செய்வதன் மூலமும் யோக வாய்ப்புகளைவரவழைத்துக் கொள்ள இயலும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் அமெரிக்கதளம்!

## இலங்கைக்கு அடிக்கும் காய்ச்சல்



அமெரிக்கத்தளம் அமையப்போகிறதோ இல்லையே! மாலைதீவில் அமெரிக்கா நிரந்தரப் படைத்தள்த்தை அமைக்கப்போவதாகவும், அதனால் இலங்கையின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் ஆபத்து ஏற்படும் என்றும் அபாய எச்சரிக்கை ஒன்றை கடந்த வாரம் விடுத்திருந்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அண்மைக்காலமாக அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், நகர்வுகளின் பின்னணியில் சம்பிக்க ரணவக்க போன்றவர்களுக்கு இந்த விவகாரம் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியமில்லை.

தெற்காசியாவில் சீனாவின் செல்வாக்கை வளர்த்து விடுவதற்குத் துணைபோகும் இலங்கை, தன்னருகே உலகின் மிகப்பெரிய வல்லரசு, இன்னொரு தளம் அமைக்கப் போவதை நிம்மதியோடு பார்த்திருக்க முடியாதுதான். மாலைதீவுடன் அமெரிக்கா விரைவில் செய்து கொள்ளவுள்ள உடன்பாட்டின் பிரதி ஒன்று வெளியானதை அடுத்தே இந்த அச்சம் இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும் கூட இந்த உடன்பாடு கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த உடன்பாட்டுக்கு எதிராக இலங்கை மற்றும் இந்தியாவிடம் கவலைகளை எழுப்புவதில் வெற்றி கண்டுள்ளார், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமட் நசீட். இந்திய சார்பாளரான அவர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும்கூட நெருக்கமானவர். தற்போது ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கியுள்ள அவர், சீன சார்புடைய தற்போதைய அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் சண்டையை மூட்டிவிடுவதற்குப் பெரும் பாடுபட்டு வருகிறார் என்பதில் சந்தேகமில்லை. மாலைதீவு அரசாங்கம் பல்வேறு விடயங்களில் இந்தியாவுடன் முட்டிமோதினாலும், சீனாவுடன் இணைந்து செயற்பட்டிருந்தாலும் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ளும் அளவுக்குப்போயுள்ளது.

தெற்காசியாவில்- இந்தியப் பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கைத் தோற்கடிக்கும் அமெரிக்க மூலோபாயத் திட்டத்தின் ஒரு கட்டமாகவே மாலைதீவுடன் புதிய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு செய்து கொள்ளப் படவுள்ளது. சீனாவின் செல்வாக்கை முறியடிக்கின்ற மூலோபாயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்தேயிருந்தாலும் மாலைதீவு விவகாரத்தில் இந்தியாவுக்கு கவலைகள் இருப்பதை மறுக்க முடியாது. இந்தியாவில் இருந்து மிகக்குறுகிய தொலைவில் அமெரிக்கத்தளம் அமைவதை இந்தியாவினால் அவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாதுதான். மாலைதீவின் செய்மதிகளை ஏவும் விடயத்தில் சீனாவின் ஆதிக்கத்தை உடைப்பதில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ள இந்தியாவுக்கு இப்போது அமெரிக்காவின் நகர்வு கலக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. அதுபோலவே சீனாவின் அரவணைப்பில் உள்ள இலங்கைக்கும் இந்த அமெரிக்க நகர்வு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தநிலையில், மாலைதீவில் அமெரிக்கா நிரந்தரத் தளத்தை அமைக்கப்போகிறதா? அவ்வாறு தளம் எதையும் அமைக்கும் திட்டம் ஏதும் தம்மிடம் கிடையாது என்று அமெரிக்கா கூறுவது உண்மையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

மாலைதீவில் நிரந்தரத்தளத்தை அமைக்கும் எந்தத் திட்டமும் அமெரிக்காவுக்கு இல்லை என்றும், இது வழக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடே என்றும் அமெரிக்கத் தரப்பில் கூறப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்கத் தரப்பில் இருவர் விளக்கமளித்துள்ளனர்.

ஒருவர், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன்.

இரண்டாமவர், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்.

இவர்கள் இருவருமே நிரந்தரத்தளத்தை அமைக்கும் திட்டம் ஏதும் கிடையாது என்று அடித்துக்கூறியுள்ளனர். அவ்வாறாயின் சோபா எனப்படும் இந்த உடன்பாடு எதற்கானது? என்ற கேள்வி எழுகிறது.

முதலில் சோபா என்றால் என்ன? இந்த உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்ன?

அமெரிக்கா உள்ளிட்ட வலிமையான நாடுகள், தமது படைகளை பிறநாடுகளில் நிலை நிறுத்துவதற்காக, அந்த நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்பாடுதான் சோபா. மாலைதீவுடன் அமெரிக்கா தற்போது செய்துகொள்ளப்போவது Status of forces agreement என்ற உடன்பாடுதான்.

அதாவது, படைகளை நிலைப்படுத்துவதற்கான உடன்பாடு என்று இதனைப் பொருள் கொள்ளலாம். ஒருநாடு, வெளிநாடு ஒன்றில் தனது படைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கு வழிசெய்வதே இந்த உடன்பாடு. ஏனைய எல்லாவிதமான பாதுகாப்பு ஒத்துழைப்புகளையும் உள்ளடக்கியதாகவே இந்த சோபா உடன்பாடு அமைந்திருக்கும்.

உலகில் அமெரிக்காதான், மிகப்பெரிய ளவில் சோபா உடன்பாட்டைச் செய்து கொண்டுள்ள நாடு. பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அவுஸ்திரேலியா, ரஸ்யா, தென் கொரியா போன்ற நாடுகளும் தமது படைகளை வெளிநாடுகளில் நிலைகொள்ள வைப்பதற்காக இத்தகைய உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ளனர். ஆனால், அமெரிக்காதான் அதிகளவில் இத்தகைய உடன்பாட்டைச் செய்துள்ளது. அவற்றில் பல இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. மாலைதீவு விடயத்திலும் அமெரிக்கா இந்த இரகசியத்தன்மையை பேணியபோதிலும் எப்படியோ அதன் பிரதி வெளியே கசிந்துவிட்டது. அதற்குப் பிரதான காரணம் மாலைதீவின் உள்நாட்டு அரசியல் தான்.

உண்மையில் சோபா உடன்பாடானது, படைகளை நிலைப்படுத்துவதற்கானது என்ற போதிலும் அமெரிக்காவோ அதனை நிராகரிக்கிறது. இது வழக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடுதான். இதுபோல 100 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் அமெரிக்கா உடன்பாடு செய்து கொண்டுள்ளது என்று அமெரிக்கத் தரப்பில் நியாயம் கூறப்பட்டுள்ளது. ஆனால், 100 இற்கும் அதிகமான நாடுகளுடன் அமெரிக்கா பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடுகளைச் செய்து கொண்டிருப்பினும் அவையெல்லாம் சோபா உடன்படிக்கையல்ல. அமெரிக்கா 100 இற்கும் அதிகமான நாடுகளுடன் செய்துகொண்டுள்ள உடன்பாட்டுக்குப் பெயர் ஏ.சி.எஸ்.ஏ எனப்படும் Acquisition and cross- servicing agreement என்ற உடன்பாடுதான்.

கையகப்படுத்தல் மற்றும் சேவைகளை பரிமாறுவதற்கான உடன்பாடு என்று இதனை வரையறுக்கலாம். இது இராணுவ விநியோக விடயங்கள் சார்ந்த அடிப்படையான ஒத்துழைப்புகளை உறுதிப்படுத்துவதற்கானது. உதவிகள், விநியோகங்கள், சேவைகளைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் இந்த உடன்பாடு செய்து கொள்ளப்படுகிறது. இது எந்த வழியிலும் ஒருநாட்டின் மீது இராணுவ நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கவில்லை.

2003 ஒக்டோபரில் அமெரிக்கா 76 நாடுகளுடன் இத்தகைய உடன்பாட்டைச் செய்து கொண்டது. இவற்றில் பெரும்பாலானவை நேட்டோ நாடுகள். இதில் இன்னொரு முக்கியமான விடயம் என்னவென்றால், அமெரிக்காவுடன் ஏ.சி.எஸ்.ஏ எனப்படும் இந்த உடன்பாட்டைச்செய்து கொண்டுள்ள நாடுகளில் இலங்கையும் அடங்குகிறது என்பதுதான்.

இலங்கையில் உள்ள வசதிகளை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கும் ஏ.சி.எஸ்.ஏ. உடன்பாட்டில் அமெரிக்காவும் இலங்கையும் 2007 மார்ச் 5 ஆம் திகதி கையெழுத்திட்டன. சந்திரிக்கா ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த காலப்பகுதியில் இதற்கான பேச்சுக்கள் ஆரம்பமாகின. இதன்விளைவாக 2007 இல் இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் அமெரிக்கா கொடுத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் விடுதலைப்புலிகளின் நான்கு ஆயுதக்கப்பல்கள் இலங்கை கடற்படை ஆழ்கடல் தாக்கி அழித்தது. அது போலவேதான், மாலைதீவும் ஏற்கனவே அமெரிக்காவுடன் இந்த உடன்பாட்டை செய்து கொண்டுள்ளது.

முகமட் நசீட் ஜனாதிபதியாக இருந்த போது தான் அந்த உடன்பாடு செய்துகொள்ளப் பட்டது. அப்போது அமெரிக்காவுடன் ஏ.சி.எஸ்.ஏ உடன்பாட்டைச் செய்துகொண்ட நசீட் தான், இப்போது சோபா உடன்பாட்டை செய்து கொள்வதற்கு எதிர்ப்புத்தெரிவித்து வருகிறார். அதேவேளை மாலைதீவில் அமெரிக்கா நிரந்தரத்தளத்தை அமைக்காது என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் முகமட் நசீம் கூறியுள்ளார். இந்த உடன்பாட்டின்கீழ், மாலைதீவு படையினருடன் அமெரிக்கப் படைகள் கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன. அமெரிக்கத் தளத்தை நிறுவும் திட்டம் ஏதும் இதில் உள்ளடக்கப்படவில்லை. எந்தவொரு நாட்டுக்கும் அதற்கான வாய்ப்பை மாலைதீவு வழங்காது. இந்த உடன்பாடு இன்னமும் இறுதியாகவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்ட பின்னர்தான் கையெழுத்திடப்படும் என்று மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் முகமட் நசீம் தெரிவித்துள்ளார். அதேவேளை, அமெரிக்கத்தூதுவர் சிசன், மாலைதீவுடன் செய்துகொள்ளப்படவுள்ள சோபா உடன்பாடு ஒரு நாட்டின் இராணுவத்துடன் அமெரிக்கா நெருக்கமான ஒத்துழைப்பை வைத்துக் கொள்வதற்கான கையாளப்படும் வழக்கமான நடைமுறைதான் என்று குறிப்பிட்டுள்ளார். உதவிகள், ஒத்துழைப்புகளை வழங்கு வதற்கான சட்ட அங்கீகாரமே இந்த சோபா உடன்பாடு என்கிறார் சிசன்.

எவ்வாறாயினும் சோபா உடன்பாடு எனப்படுவது பொதுவாக படைகளை நிலைநிறுத்துவதை அடிப்படையாகக்கொண்டதே. ஆனாலும், மாலைதீவில் நிரந்தரப் படைத்தளத்தை நிறுவும்திட்டம்தமக்கு இல்லையென்று அமெரிக்கா கூறுகிறது. சிலவேளைகளில் மாலைதீவு விவகாரத்தில் இந்தியாவுடனான நட்புக் கருதி அமெரிக்கா சில மென்போக்குகளை கடைப்பிடிக்கலாம். ஏனென்றால், இந்தியாவைப் பகைத்துக்கொள்ள ஒருபோதும் அமெரிக்கா விரும்பாது. அதனால்தான் பிளேக் தெற்காசிய விவகாரங்களில் இந்தியாவுடன் அமெரிக்கா வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்வதாக கூறியுள்ளார். இந்தியாவும்கூட இந்த விவகாரத்தை அதிகளவில் பெரிதுபடுத்த விரும்பிவில்லை. காரணம், இது சீனத் தலையீட்டுக்கு ஆப்பு வைக்கின்ற ஒரு மூலோபாய நகர்வு. அதனால்தான் அமெரிக்காவுடன் அதிகளவில் முரண்டு பிடிக்கவில்லை.

மாலைதீவுடன் அமெரிக்கா சோபா உடன்பாடு செய்துகொண்டால் அந்த நாட்டை அமெரிக்கா தனது கடற்படைக் கப்பல்கள், போர் விமானங்களை தரித்து நிற்கும் தளமாகப் பயன்படுத்த முடியும். இப்போது இலங்கை அரசுக்கும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வந்துள்ள மிகப்பெரிய அச்சம் என்னவென்றால், இந்தியப் பெருங்கடலில் அம்பாந்தோட்டையைப் பயன்படுத்தி சீனா திறந்து விட்டுள்ள விநியோகப் பாதைக்கு இந்த சோபாவினால் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதுதான்.

மாலைதீவில் அமெரிக்கத் தளம் அமையப்போகிறதோ இல்லையோ- புவிசார் அரசியல் போக்குகளை கருத்தில் கொண்டு சீனாவைத்தனக்குச் சார்பாக பயன்படுத்திக்கொண்டு காய்களை நகர்த்திய இலங்கைக்கு, இது இப்போதே காய்ச்சலை ஏற்படுத்திவிட்டது என்பதே உண்மை.

இராணுவ ஆய்வாளர் -சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மேலும் கடன் பெறப்படும்

## பெற்றோலியத் துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் ஒரு எரி பொருள் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 320 பில்லியன் ரூபாய்களை கடனாக பெறவிருப்பதாக பெற்றோலியத் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சபுகஸ்கந்தயில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று காணப்படுகின்றது. எனினும் இதில் ஈரானில் இருந்து கொண்டு வரக்கூடிய மசகு எண்ணெயை தவிர வேறு நாடுகளின் மசகு எண்ணெயை சுத்திகரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அமெரிக்கா ஈரானுக்கு எதிராக பொருளாதார தடை விதித்துள்ள நிலையில் அங்கிருந்து மசகு எண்ணெயை கொள்வனவு செய்வதில் சிக்கல் காணப்படுகின்றது.

இந்நிலையில், அமெரிக்கா, சீனா, துருக்கி ஆகிய நாடுகளில் இருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்து அவற்றை சுத்திகரிப்பு செய்யும் வகையிலான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை உருவாக்க இக்கடன் கோரப்படவுள்ளது.

இதன் மூலம் எரிபொருள் இறக்குமதி செலவுகளைக் குறைக்க முடியும் என் றும் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். (அ-2)

# கூட்டமைப்பின் கோரிக்கையை நிராகரித்தது அரசாங்கம்

தமிழக அகதி முகாம்களில் வாழ்ந்து வருவோருக்கும் எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் அகதி முகாம்களில் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வடக்கைச் சேர்ந்த புலம் பெயர்ந்தவர்கள் அனைவருக்கும் வாக்களிக்க வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் வாழ்ந்து வரும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கும் வட மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். ஆயினும் கூட்டமைப்பின் இக்கோரிக்கையை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் திட்டவட்டமாக மறுத்துள்ளார். அவர் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழர்கள் வாக்களிக்க விரும்பினால் இலங்கை வந்து தாங்கள் அகதிகளாகச் சென்றதை உறுதிப்படுத்தினால் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# புதிய இந்திய தூதுவர் எதிர்வரும் ஜூன் மாதம் பதவியேற்பார்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என தெரியவருகின்றது. மூன்றரை ஆண்டுகளாக இலங்கைக்கான இந்தியத்தூதுவராக பணியாற்றிய அசோக் கே காந்தா எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியுடன் புதுடில்லி திரும்பவுள்ளார்.

இவர் இந்திய வெளிவிவகார அமைச்சில் கிழக்காசிய விவகாரப் பிரிவுக்கு பொறுப்பான செயலராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கொழும்புக்கான புதிய இந்தியத் தூதுவராக வை.கே. சிங்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனத்தை இலங்கை அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒருதுறைசார் அதிகாரியாக உள்ள வை.கே. சிங்ஹா பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் போது, ஜம்மு -காஷ்மீர் மாநில ஆளுநராக நிய மிக்கப்பட்டிருந்த,மூத்த இந்திய இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் எஸ். கே. சிங்கின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தற்போது இலங்கையிலிருந்து வெளியேறவுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவும் பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவின் மருமகன் என்பதும் குறிப்பிடத்தக்க ஒற்றுமையாகும். (அ)

# கச்சதீவை மீட்பது பற்றி மத்திய அரசு பரிசீலனை

## மத்திய மந்திரி தெரிவிப்பு

தமிழக சட்டசபையில் கச்சதீவை மீட்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய மந்திரி நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

விமானம் மூலம் இரவு டில்லியில் இருந்து சென்னை வந்த அவர் விமானநிலையத்தில் வைத்து நிருபர்களிடம் கூறியதாவது,

கச் சதீவு ஏற்கனவே இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இலங்கை வசம் உள்ளது. கச்சதீவில் மீனவர்கள் தங்கி ஓய்வு எடுக்கலாம். வலைகள் உலர்த்தலாம். அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இரு நாட்டவரும் பங்கேற்கலாம் என்ற ஒப்பந்த அடிப்படையில் செயற்படுகிறது வருகிறது.

தமிழக சட்டசபையில் கச்சதீவை மீட்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதுபோல் தி.மு.கவும் மற்றும் பல கட்சிகளும் கச்சதீவை மீட்க வலியுறுத்தி வருகின்றன. இந்தக் கருத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யும் என அவர் கூறினார், (அ-2)

# ஹலால் தொடர்பான இறுதி அறிக்கை அமைச்சரவையில்

ஹலால் சான்றிதழ் விநியோகம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவினரைவில் இறுதி அறிக்கையொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக உறுப்பினர்கள் இது குறித்து கலந்தாலோசிக்கவுள்ளதாக குழுவின் உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசீ தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவிற்கு முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க தலைமை தாங்கியுள்ளார்.

எவ்வாறெனினும் அறிக்கையின் உள்ளடக்கங்கள் பற்றி தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக கூடி ஆராய்ந்து இறுதி அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ரயிலில் தலை வைத்து ஒருவர் தற்கொலை

கொழும்பில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த புகையிரதத்தின் பாதையில் தலை வைத்து ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். சுனில் (வயது 50) என்ற நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த 11 ஆம் திகதி இரவு 8 மணியளவில் பேருவளை 11 ஆவது ஒழுங்கை புகையிரதக் கடவையில் இடம்பெற்றுள்ளது. சடலம் நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)




❖ 1264-இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றி பிரான்சில் கைது செய்யப்பட்டான்.

❖ 1610-பிரான்சின் நான்காம் ஹென்றி மன்னன் கொலை செய்யப்பட்டான். பதின்மூன்றாம் லூயி முடி சூடினான்.

❖ 1643-பதின்மூன்றாம் லூயி இறக்க, அவனது 4 வயது மகன் பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனானான்.

❖ 1796-பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை எட்வர்ட் ஜென்னர் அறிமுகப்படுத்தினார்.

❖ 1811- பராகுவே ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.

❖ 1861-ஸ்பெயினில் பார்சிலோனாவில் 859 கிராம் எடையுள்ள விண்கல் ஒன்று வீழ்ந்தது.

❖ 1879 - 463 இந்தியத் தொழிலாளர்களைக் கொண்ட முதலாவது தொகுதியினர் லியோனிடாஸ் கப்பலில் பிஜியை அடைந்தனர்.

❖ 1900 -கோடைக் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பரிசில் ஆரம்பமாயின.

❖ 1931-சுவீடனில் தொழிற்சங்க உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிஸார் சுட்டதில் 5 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

❖ 1939-பெருவைச் சேர்ந்த 5 வயது நிரம்பிய லீனா மெடினா உலகின் வயதில் குறைந்த முதலாவது தாயாக அறிவிக்கப்பட்டார்.

❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்து ஜேர்மனியிடம் சரணடைந்தது.

❖ 1943-இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலியாவின் செண்டோர் என்ற மருத்துவக் கப்பல் குயின்ஸ்லாந் துக்கருகில் ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதில் 268 பேர் உயிரிழந்தனர்.

❖ 1948-இஸ்ரேல் நாடு தன்னைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தி தற்காலிக அரசையும் அறிவித்தது. அரபு நாடுகள் இஸ்ரேலைத் தாக்கத் தொடங்கின.

❖ 1955 - பனிப்போர்: சோவியத் ஒன்றியம் உட்பட எட்டு நாடுகள் சேர்ந்து வார்சா ஒப்பந்தம் எனப்படும் தற்காப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

❖ 1965 - இலங்கையில் ரோகண வீஜயவீர மக்கள் விடுதலை முன்னணி என்னும் அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

❖ 1973 - ஸ்கைலாப் என்ற ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையம் சட்டர்ன் 5 விண்கப்பலில் இருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.

❖ 1976-யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையில் நடந்த தமிழர் விடுதலை கூட்டணியின் கட்சி மாநாட்டில் தமிழீழப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

❖ 2004 -டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பிரெட்ரிக், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த "மேரி டொனால்ட்சன்" என்னும் பெண்ணை திருமணம் புரிந்தார்.

### பிறப்புக்கள்

❖ 1907 - அயுப் கான், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ. 1974)

❖ 1944-ஜோர்ச் லூகாஸ், திரைப்பட இயக்குநர்

❖ 1948-பொப் வூல்மர், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பாகிஸ்தான் துடுப்பாட்ட அணியின் பயிற்றுநர் (இ. 2007)

❖ 1953-நொரொடாம் சிகாமணி, கம்போடியாவின் மன்னர்

### இறப்புகள்

❖ 1574 - குரு அமர்தாஸ், மூன்றாவது சீக்கிய குரு (பி. 1479)

❖ 1837 - ஆ. குமாரசாமிப்பிள்ளை (பி. 1784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.சாலையை வேறு இடத்திற்கு மாற்ற ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

## ஜனாதிபதி, அமைச்சர்களுக்கும் மகஜர் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபையினரின் சாலையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை கிளி.அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். இதனை தடுத்து நிறுத்துமாறு கிளிநொச்சிசாலை ஊழியர்கள் கோரிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கோரிக்கை ஜனாதிபதி உட்பட பொருளாதார அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடமாகாணத்திலுள்ள அனைத்து திணைக்களங்களும் அந்தந்த இடங்களில் இயங்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அனைத்து திணைக்களங்களும் பழைய இடங்களிலேயே இயங்கி வருகின்றன. அந்த வகையில் 1958 ஆம் ஆண்டு முதல் ஏ-9 பிரதான பாதையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் இலங்கை போக்குவரத்து சபையினரின் சாலை அமைந்திருந்தது.

தற்போது இவ்விடத்திலிருந்து 8 கிலோ மீற்றருக்கு அப்பால் இச்சாலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு சாலையை மாற்றுவதனால் நீண்ட தூரத்திலிருந்து போக்குவரத்து கடமைக்கு வரும் ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்குட்படலாம்.

பழைய இடத்தில் சாலையை அமைத்தால் ஏ-9 பாதையூடாக செல்லும் பேருந்து வண்டிகள் பழுதடைந்தாலும் இலகுவாக சீர்செய்து பயணத்தைத் தொடர முடியும். தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் எமது சாலையின் ஒரு பகுதியை பொதுமக்களின் பொதுச்சந்தைக்கும் மிகுதியிலுள்ள காணியை சிறுவர் பூங்காவிற்கும் கொடுத்துள்ளனர்.

இக்காணியில் 1/3 பகுதியை தனியார் பேருந்து நிலையத்திற்கும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி சாலையை தற்போதுள்ள இடத்திலிருந்து 6 கிலோ மீற்றருக்கு அப் பால் உள்ள கனகபுரத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எனவே, இத்திட்டத்தை நிறுத்தி தற்போது இருக்கும் இடத்திலேயே கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம்மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அமைதியான முறையில் சுலோகங்களைத் தாங்கிக்கொண்டு ஒரு போராட்டத்தை இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள் முன்னெடுத்திருந்தார்கள்.

ஆயினும் இதுவரையில் சாலை அமைப்பது தொடர்பான தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கவில்லை என அவ் ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ)

# இந்தியா – இலங்கை இடையே வர்த்தக உடன்படிக்கை

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கைகளின் பெறுமதியை 10 ஆயிரம் மில்லியன் டொலர்களாக அதிகரிக்க இரு நாடுகளின் அரசாங்கங்களும் தீர்மானித்துள்ளன என இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும் எனவும் இதற்காக வரி மற்றும் வரியற்ற தடைகளை நீக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# வாகன விபத்தில் ஒருவர் மரணம்

தம்புள்ளை கபுவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீதியில் சென்று கொண்டிருந்தவருடன் சிற்றூர்தி ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 34 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் சிற்றூர்தி சாரதி கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரசியல் தீர்வுக்கான புதிய அரசியலமைப்பு

## தயாரிக்கிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

நடைமுறை பிரச்சினைக்கு தீர்வுக் காணும் வகையில் இலங்கையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி புதிய அரசியல் அமைப்பு யோசனையைத் தயாரிக்கவுள்ளது.

கட்சி தகவல்களின் படி இதற்கான கட்சி பிரதிநிதிகள் மத்தியில் இருந்து குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி விஜய்தாஸ ராஜபக்ஷ தலைமை தாங்கவுள்ளார்.

குறித்த குழுவை எதிர்வரும் 29 ஆம் திகதியன்று முதல்தடவையாக சந்திக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படும் போது இனக்குழுக்களின் கருத்துக்களும் பெற்றுக்கொள்ளப்படும் என்று அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடக்கு தேர்தலில் தமிழினி போட்டி?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல்துறையின் மகளிர் அணி தலைவியாக இருந்த தமிழினி எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக தெரியவருகிறது.

தற்போது வவுனியாவில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழினி விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாகவும் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழினி நீதிமன்றத்தினால் சகல குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யப்பட உள்ளார்.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச தலைவரான கே.பி என்ற குமரன் பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை வடமாகாணசபைத் தேர்தலில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ‘ தலைக்கவசம் அவசியமில்லை ’

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஜும்மா தொழுகைக்காக மோட்டார் சைக்கிள்களில் பள்ளிக்கு செல்லும் முஸ்லிம்களுக்கு கட்டாய தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற சட்டத்தில் இருந்து விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வீ.இந்திரன் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இதன்படி, காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு நகர்களில் நண்பகல் 12 மணிமுதல் 2 மணி வரை ஜும்மா தொழுகைகளுக்காக செல்லும் முஸ்லிம்கள் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டியதில்லை.

சட்டம் அனைவருக்கும் பொதுவானது. எனினும் மனிதாபிமான ரீதியாக இந்த சலுகை முஸ்லிம்களுக்கு வழங்கப்படுவதாக பிரதி பொலிஸ்மா அதிபர் இந்நிகழ்வின் போது தெரிவித்தார். (அ-2)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டியில் 6 ஆவது தடவையும் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அணியினருடன் பாடசாலை அதிபர் ஷிராணி மில்ஸ், பயிற்றுநர் ப.தர்மகுமாரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை

## பொருளாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் இன்னமும் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் சில சரத்துக்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கத் தடையாக அமைந்துள்ளன என சில தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் 13 ஆம் திருத்தச்சட்டத்தின் சில பகுதிகளை இரத்து செய்வதா? இல்லையா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் எவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டாலும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தும் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அனைத்து கூட்டணிக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் அது கூட்டணிக் கட்சிகளின் தார்மீகப் பொறுப்பாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஊடகவியலாளர்களின் உதவி அவசியமில்லை

## *எதிர்க்கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு*

(கொழும்பு)

ஊடகவியலாளர்களின் உதவி அவசியமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் தொகுதி அமைப்பாளர் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எனது நடவடிக்கைகள் தொடர்பில் தேவையான அளவுக்கு பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆதலால், ஊடகவியலாளர்கள் அனைவரும் இந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும்.

குறிப்பாக பிரதேச ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பு அவசியமில்லை என தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் தோற்றுவிட்டோம்; அபிவிருத்தியில் முன்னேறுவோம்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



கடந்த 30 வருட காலமாக எல்லைகளுக்காக போராடி அழிந்தோம். அது எம்மால் முடியாத காரணத்தினால் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தமிழர்களின் இருப்பை காப்பாற்றக்கூடிய விடயங்களான பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டையும் தக்க வைக்கின்ற போதே தமிழர்களின் இருப்பு காப்பாற்றப்படும் என மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆலோசனை கூறியுள்ளார்.

பட்டிருப்பு புளூடயமன்ட் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் பல அபிவிருத்திகளை நாங்கள் கண்டு வருகின்றோம்.

இன்று இளைஞர், யுவதிகள் சுதந்திரமாக விளையாடி மகிழ்ந்து தமது கல்வி நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுத்து பெருமை சேர்ப்பவர்களாக இருக்கின்றார்கள்.

இது யுத்த காலமாக இருக்குமானால் இந்த இளைஞர், யுவதிகளை பார்த்திருக்க முடியாது. ஒரு காலத்தில் அச்சத்துடன் அந்நியப்பட்ட நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஆனால், இன்று அந்நிலை மாறி கட்டம் கட்டமாக பெரிய மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். இன்று பல்லாயிரக் கணக்கான மில்லியன் ரூபாய்களை மாவட்டத்தின் வளர்ச்சிக்காக கொடுத்துள்ளேன்.

30 வருடமாக யுத்தம் செய்தோம். எல்லைகளுக்காக பேராடினோம். அழிந்தோம். ஆனால், முடிவு இல்லை. அதனால் மாற்றத்தை ஏற்படுத்தினோம். தமிழர்களின் இருப்பை காப்பாற்றக் கூடிய விடயம் இரண்டு உள்ளன. ஒன்று பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது.

மற்றையது கல்வியை கட்டியெழுப்புவது. இரண்டையும் தக்க வைக்கின்ற போதே தமிழர்களின் இருப்பு காப்பாற்றப்படும். இதில் எவரும் தலையிட முடியாது.

கடந்த காலத்தில் அமைச்சரவையின் செயலாளர்களில் அதிகமானவர்கள் தமிழர்களாக இருந்தனர். 30 வருடங்களுக்கு முன்னர் இதுதான் நிலைமை. திறைசேரியில் கூட உயர் பதவிகளில் தமிழர்களே இருந்தனர்.

யுத்தம் காரணமாக தமிழ் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறியமை, கல்வியை சிறந்த முறையில் கற்க முடியாமை. இவற்றால் தான் இன்று நிலைமை மாற்றமடைந்துள்ளது.

இன்று இரண்டு தமிழர்களே அமைச்சின் செயலாளர்களாக உள்ளனர். அந்தளவுக்கு எமது கல்வி நிலை பின் தள்ளப்பட்டுள்ளது. அதற்கு காரணம் யுத்தமே.

இப்போது சிறந்த கல்வியை கற்று சமவுரிமையான வாய்ப்புக்களை பெறுவதற்கு எமது கல்விமான்களுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதற்கு அரசாங்கம் ஒரு போதும் தடையாக இருக்கமாட்டாது.

நாங்கள் எமது மக்களுக்கு வளங்களைப் பெற்றுக் கொடுக்கவே அரசில் இணைந்துள்ளோம். எங்கு வளம் இருக்கின்றதோ அங்கேயே நாங்கள் இருக்க வேண்டும்.

அது சிலவேளைகளில் மாற்றமடையலாம். எங்களது மக்களை நாங்கள் எப்படியாவது வாழ வைக்க வேண்டும் என்றார். (அ-2)

# காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் வடக்கு மாகாண தேர்தலை நடத்துக விக்கிரமபாகு கோரிக்கை

(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யாது வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மை இனம் என்பதால் அவர்களுக்குபிரச்சினைகள் இல்லை எனவும் தமிழ் மக்களுக்கு அதனை விட பிரச்சினைகள் இருப்பதாகவும் வடக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்கும் வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

இந்த அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படுவதை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். இதற்கு இடமளிக்க முடியாது. அத்துடன் இந்த அதிகாரப் பரவலாக்கம் போதுமானதல்ல.

எனினும் நாட்டின் சட்டத்தில் உள்ள அதிகாரங்களையாவது பாதுகாக்க வேண்டும். அதிகாரத்தை பரவலாக்குவதே பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு. சிங்கள மக்கள் பெரும்பான்மையின மக்கள். அவர்களை விட அதிகளவான பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு உள்ளன. அவர்கள் சகல பக்கங்களில் இருந்தும் அழுத்தங்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# மகாசேன் என்ற பெயரை பிரபாகரன் என்று மாற்றுக

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு கடலுக்கு அருகில் மையம் கொண்டுள்ள புயல் சின்னத்திற்கு மகாசேன் என்ற பெயரை பயன்படுத்துவதற்கு ராவணா சக்தி அமைப்பு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மகாசேன் (மகாசேனன்) மன்னரின் பெயரை அழிவுகளை ஏற்படுத்தும் புயலுக்கு பயன்படுத்தாது, பிசாசு அல்லது பிரபாகரன் என்ற பெயர்களை பயன்படுத்தியிருந்தால் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். இதனை விடுத்து எதற்காக இலங்கையை ஆட்சி செய்த மன்னனின் பெயரை சூட்டினர் எனவும், வரலாற்றை அறியாத முட்டாள்களின் செயல் இதுவென தாம் கருதுவதாகவும் அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். (அ)

# தொழிற்சங்கங்களின் போராட்டத்திற்கு ஐ.தே.கட்சி ஆதரவு- பெரேரா எம்.பி.

(கொழும்பு)

மின் கட்டணம் உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தைக் கண்டித்து தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கவுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவை வழங்கும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் மின் கட்டணம் என்றும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. பவித்திராவும் சம்பிக்க ரணவக்கவும் மின்சார சபை இலாபத்தில் இயங்குவதாக கூறுகின்றனர். உண்மையில் இது நட்டத்திலேயே இயங்குகின்றது.

அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் கைது செய்யப்படுகின்ற நிலையே உள்ளது. இதன் ஒரு கட்டமாகவே அசாத் சாலி கைது செய்யப்பட்டார். ஆனால், அசாத் சாலி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாமையாலேயே அரசாங்கம் அவரை அவசரமாக விடுதலை செய்துள்ளது.

மேலும், அரசாங்கத்தின் தாங்க முடியாத அசாதாரண விலை ஏற்றத்தினால் மக்கள் இன்று சொல்லொணா துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதற்காக கட்சி பேதமற்று அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டு எமக்கான நீதியை வென்றெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வவுனியா நகர சபையில் புதிய செயலாளர் பதவியேற்றார்

(பூந்தோட்டம்)

வவுனியா நகர சபைக்கு புதிய செயலாளராக க.சத்தியசீலன் பதவியேற்றுக் கொண்டுள்ளார்.


வவுனியா நகரசபையில் செயலாளராக கடமையாற்றிய வீ. வசந்தகுமார் திடீரென யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே க. சத்தியசீலன் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர் நேற்று வவுனியா நகரசபையின் செயலாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதேவேளை, முன்னாள் நகரசபை செயலாளர் மீது குற்றம் சுமத்தி நகரசபை முகாமைத்துவ உதவியாளர் வடமாகாண ஆளுநருக்கு செய்த முறைப்பாட்டின் படியும் வவுனியாவில் இருந்து சென்ற குழுவொன்று வவுனியா நகரசபையின் முன்னாள் செயலாளர் தொடர்பாக வடமாகாண ஆளுநருக்கு செய்த முறைப்பாட்டின் படியும் தற்போது வவுனியா நகரசபையில் விசேட குழுவொன்று நகரசபை உத்தியோகத்தர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நகரசபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விடுமுறை வழங்க வேண்டாமென விசாரணைக்குழு உத்தரவிட்டுள்ளதாக நகர சபையின் உயரதிகாரியொருவர் அறிவித்துள்ளார். (அ-2-266)

# மரண அறிவித்தல்



## மு.வ. சுப்பிரமணியம் மகாதேவா

கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாதேவா கடந்த 11.05.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதியினரின் மருமனும் இராஜேஸ்வரியின் கணவரும் ஆவார். நிஷாணந்தினி (ஜேர்மனி), பார்த்தீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமகுமார் (ஜேர்மனி), சீத்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினசபாபதி (பிரான்ஸ்) பாக்கியநாதன் (ஜேர்மனி) பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்), கமலேஸ்வரி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, நாகேஸ்வரி, சொர்ணலக்சுமி, புஸ்பரத்தினம், யோகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் அதீனா (ஜேர்மனி) அதீனன் (ஜேர்மனி), அக்ஷாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.05.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (2609)

தகவல் : தே.ஜெயகுமார்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர்தர்ஷனை இலக்குவைத்து தாக்குதல்

### மூவர் பலி

பஸ்தர் மாவட்டத்தில் உள்ள மரெங்கா கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நக்சலைட்டுகள் நடத்திய திடீர் தாக்குதலில் 3 பொலிஸார் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

அங்கிருந்த தூர்தர்ஷனின் ஒளிபரப்பு கோபுரத்தை தகர்க்க நக்சலைட்டுகள் முயற்சித்தபோது இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்த தாக்குதல் குறுகிய நேரம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தப்பியோடிய நக்சலைட்டுகளை தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.



### தேர்தலில் வெற்றிபெற்ற நவாஷ் ஷெரிப்பை

# வாழ்த்துகிறார் மன்மோகன் சிங்

பாகிஸ்தான் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நவாஸ் ஷெரீபுக்கும் அவரது கட்சிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இரு தரப்புக்கும் வசதியான நேரத்தில் இந்தியாவுக்கு வருமாறு ஷெரீபுக்குப் பிரதமர் அழைப்பு விடுத்தார். மேலும், வன்முறை தொடர்பான அச்சுறுத்தல்களை முறியடித்து, பெருவாரியாக வாக்களித்த மக்களையும், தேர்தலில் பங்கேற்ற அரசியல் கட்சி களையும் அவர் வாழ்த்தியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் புதிய சகாப்தத்தைத் தொடங்குவதில் பாகிஸ்தானின் புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற இந்தியா ஆர்வம் கொண்டி ருப்பதை பிரதமர் வெளிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி

# பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான நிலம் கிரி.சங்கத்துக்கு வழங்கப்பட்டதால் சர்ச்சை

பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 15.30 ஏக்கர் நிலத்தை குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் முறைகேடாக ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்துக்கு அளித்துள்ள விவகாரம் அம்பலமாகியிருக்கிறது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்திருப்பவை வருமாறு.

ஆந்திர மாநிலம் செகந்தராபாதில் அமைந்துள்ள 5.71 ஏக்கர் பாதுகாப்பு அமைச்சக நிலப்பரப்பை, ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்துக்கு 60 ஆண்டு கால குத்தகைக்கு விட அமைச்சகம் 1992ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி முடிவு செய்தது.

பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்புடன், அமைச்சகத்துக்கு சொந்தமான இந்த நிலம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் நடைமுறைகளை பின்பற்றாமல் வழங்கப்பட்டது.

மேலும் 9.59 ஏக்கர் நிலமும் ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்துக்கு மாற்றப்பட்டது. ஐந்து ஆண்டு காலத்துக்கு இது குத்தகைக்கு விடப்படுவதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த நில பேரத்துக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படவில்லை.

இந்த நிலத்தில் ஹைதராபாத் கிரிக்கெட் சங்கம் விளையாட்டு அரங்கம், பயிற்சிப் பாடசாலை மற்றும் கேளிக்கை சங்கம் ஆகியவற்றை அமைகக திட்டமிட்டது.

ஆனால் பிரதமர் அலுவலகம், 1996 பெப்ரவரி 23 ஆம் திகதி அளித்த உத்தரவின் அடிப்படையில் ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்துக்கு நிலத்தை வழங்கும் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.

ஆனாலும், பாதுகாப்பு அமைச்சகம் இந்த நிலத்தை திரும்ப தனது கைவசம் எடுத்துக் கொள்ளவில்லை. இடைபட்ட காலத்துக்கு செலுத்தப்பட வேண்டிய வாடகையை வசூல செய்யாமல் அந்த நிலத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள பாதுகாப்புத் துறைச் செயலர் சம்மதிக்கவில்லை.

இந்த நிலத்தின் இப்போதைய மதிப்பு ரூ. 120 கோடியாகும். ஆனால், ஹைதராபாத் கிரிக்கெட் சங்கம் இதற்காக ரூ. 1.88 கோடியை குத் தகை தொகையாகவும் ஆண்டு வாடகையாக ரூ. 13 லட்சம் மட்டுமே அளிக்க ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், ஹைதராபாத் கிரிக்கெட் சங்கம் ஒரு மாதத்துக்குள் நிலத்தை திருப்பி அளிக்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறை கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

மேலும், பாதுகாப்பு அமைச்சக நில நிர்வாக கூடுதல் தலைமை இயக்குநருக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தனியாருக்கு அரசு நிலத்தை முறைகேடாக அளித்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தோனி அதில் குறிப்பிட்டிருப்பதாக பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### இணையத் துடித்த ஜோடிகளை

# சேர்த்துவைத்தார் விஜய்



திருச்சியில் திருமண பந்தத்தில் இணைய விரும்பிய 15 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைத்தார் நடிகர் விஜய்.

மாவட்ட விஜய் இளைஞரணி தலைமை நற்பணி இயக்கம் சார்பில் 15 ஏழை ஜோடிகளுக்கு திருச்சியில் இலவச திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வு நற்பணி இயக்கத் தலைவர் குடமுருட்டி கரிகாலன் தலைமை நடைபெற்றது. இதில் நடிகர் விஜய் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 15 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, 51 வகையான சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.

பின்னர் ரசிகர்கள் எழுதி கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில், ரசிகர்கள்தான் எனக்கு தலைவர்கள். தனது மகன் எதிர் காலத்தில் என்னவாக வருவார் என்று இப்போது சொல்லமுடியாது. போகப் போகத் தான் தெரியும். 'தலைவா' அரசியல் படம் இல்லை. முழு அக்ஷன் படம். திரைக் கதை சிறப்பாக இருக்கும். படம் மிகவும் நன்றாக வந்துள்ளது. ரசிகர்களை கவரும் என்றார்.

தற்போது மக்களுக்கு தொண்டு செய்து வருகிறீர்கள். அரசியலுக்கு வரும் நோக்கம் உண்டா? எப்போது புதிய கட்சியைத் ஆரம்பித்து அரசியலுக்கு வருவீர்கள்? என்ற கேள்விக்கு, "இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதை வைத்து நீங்கள் இப்படி கேட்கிறீர்கள். இதற்கும் அரசியலுக்கும் எந்த தொடர்பும் இல்லை. மன திருப்திக்காக இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துகிறேன். இதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறெதிலும் இல்லை. இருந்தாலும் உங்கள் கேள்விக்கான பதில் (ஒரு நிமிட இடைவெளிவிட்டு...) பார்க்கலாம். என்றதும் ரசிகர்கள் கரவொலி எழுப்பினர். நிகழ்ச்சியின் போது ரசிகர்கள் கூட்டம் மேடையை நோக்கி முண்டியடித்தனர். இதனால் நெரிசல் ஏற்பட்டது. பொலிசாரும், விஜய் உடன் வந்திருந்த மெய்க்காவலர்களும் ரசிகர்களை கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் முடியவில்லை. உடனே விஜய் அங்கிருந்து புறப்பட்டார்.

### வன்முறையில் யார் ஈடுபட்டாலும்

# சட்டங்கள் பாயும்!

### எச்சரிக்கிறார் தமிழக முதல்வர்



வன்முறையில் யார் ஈடுபட்டாலும் தேசிய பாதுகாப்புச் சட்டமும் குண்டர் பாதுகாபபு சட்டமும் நிச்சயம் பாயும என்றும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் கட்சிகளைத தடை செய்யவும் அரசு தயங்காது என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கடும் தொனியில் எச்சரித்திருக்கிறார்.

தமிழக சட்டசபையில் காங்கிரஸ், இடதுசாரி கட்சி எம்.எல்.ஏக்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தில் கலந்துகொண்டு அவர் மேலும உரையாற்றுகையில், தமிழகத்தில் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய கட்சிகளைத் தடை செய்யவும் அரசு தயங்காது. பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டவிரோத நடவடிக்கைகளை அரசு சகித் துக் கொண்டிருக்காது. பாமக வினரால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கான நட்ட ஈட்டை அக் கட்சியினரிடம் இருந்து கோருவோம். டாக்டர் ராமதாஸ் மீது தமிழக அரசு சார்பாக அவதூறு வழக்குதொடரப்படும். வன்முறையில் யார் ஈடுபட்டாலும் தேசிய பாதுகாப் புச் சட்டமும் குண்டர் பாதுகாபபு சட்டமும் நிச்சயம் பாயும் என்றார் அவர்.



நிலக்கரி ஊழல் தொடர்பாக பிரதமர் பதவி விலகக்கோரி புதுடில்லியில் பிரதமர் வீட்டின் அருகே பாரதீய ஜனதா பா.ஜ. இளைஞர் அணியினர் போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை பொலிஸார் ஓட ஓடத்தாககினர். இதன்போது பொலிஸாரிடம் சிக்கிய இளைஞர் ஒருவரின் நிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் தமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும்.

-மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மன்னார் மாநாட்டில் ஆர்கொலோ சதுரர்?

தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை ஆர்கொலோ சதுரர் என்பது மணிவாசகரின் திருவாசக வரிகள்.

உன்னைத் தந்து என்னை ஆட் கொண்டாய்; அப்படியானால் நம் இருவரில் சிவப்பரம் பொருளாகிய நீயா? மந்திரியாக இருந்த இந்த மணிவாசகனா கெட்டிக்காரன் என்று வினவுவதாக சதுரர் என்றபதம் பொருள் கொள்ளப்படும்.

இஃது சிவனுக்கும் மணிவாசகனுக்கும் உள்ள விடயமாயினும் அதன் உள்ளார்ந்தம், இறைவனாகிய பதிக்கும் ஆன்மாவாகிய பசுவுக்கும் உள்ள தொடர்ப்பைக் குறிப்பதாகும்.

ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கு இப்போது பசுவும்; பதியும் பிரச்சினையே இல்லை.

மாறாக எங்களுக்கு இருக்கின்ற ஒரே பிரச்சினை பாசம் தான்.

பாசம் என்றால் என்ன?என்று கேட்டு விடாதீர்கள்.

பதவியில், பணத்தில், நிலத்தில், புலத்தில் எனப் பாசம் பரந்தது.

தமிழ் மக்களிடம் இருப்பது தாயகப் பாசம்–தமிழ்ப் பாசம்–இனப் பாசம்.

எங்கள் அரசியல்வாதிகளிடம் இருப்பது பதவிப் பாசம்.

சிவில் சமூகத்திடம் இருப்பது மதப் பாசம்.

ஆக, தமிழ் மக்கள் எந்த வகையிலாவது எங்கள் இனத்திற்கு ஒரு விடிவு கிடைத்துவிட வேண்டும். நாங்கள் அலைந்தொழிந்ததுபோல் எங்கள் தமிழ்ப் பிள்ளைகள் அலையாதிருக்க வேண்டும்.

தமிழன் தமிழ் மண்ணை ஆளவேண்டும் என்ற பாசத்தில் வீழ்ந்து அதன் கிடைப்பனவிற்காகக் காத்திருக்கின்றனர். கூடவே, எங்கள் அரசியல்வாதிகள் இலக்கை அடைந்து தங்கள் பாசத்தை ஒப்பேற்றி ஆட்சிப் பேறு தருவார்கள் என்றும் நம்பியிருக்கிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளோ திருகுதாளம் போட்டு திருநடனம் ஆடுகின்றார்கள்.

அவர்களின் திருக்கூத்தில் படைத்தலுக்கும் காத்தலுக்கும் அருளலுக்கும் இடமேயில்லை.

மறைத்தலும் அழித்தலுமாக அவர்களின் கூத்து அமைந்துகொள்ள, இடையிலே தமிழ் சிவில் சமூகம் பஞ்சகிருத்தியம் செய்யும் பரம்பொருளின் பெரும் புகழை இச்சிவபூமியில் இல்லாதொழிக்கக் கடும் பாசம் கொண்டு பெரும் பாடுபடுகிறது.

இதன் ஓர் அங்கம்தான் மன்னாரில் நடந்த மாநாடு.

இந்து மதப் பிரதிநிதிகள் – அந்தணச் சிவாச்சாரியர்கள் எவரும் அந்த மாநாட்டில் இல்லை.

சிங்கக் கொடி காளிக் கொடியாகத் தெரிந்த சம்பந்தப் பெருமானார் தாம் செய்தவற்றுக்கு பாவ மன்னிப்பு மட்டும் போதும் என்று நினைத்துக் கொண்டார் போலும். நாம் என்ன செய்வது? தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை ஆர்கொலோ சதுரர் என்று திருவாசகம் பாடுவோம்.

# நிரந்தர அரசியல் தீர்வினை நோக்கி நகர பொதுவேலைத்திட்டம் உருவாக்கப்படவேண்டும்

## மன்னார் ஆயரின் தலைமையில் ஆராய்வு

தமிழின அழிப்புக்கு எதிராகவும் நிரந்தர அரசியல் தீர்வினை நோக்கி முன்னெடுக்கப்படவேண்டிய பொது வேலைத் திட்டம் தொடர்பாகவும் ஒரு இணக்கப்பாடு எட்டப்படவேண்டும் என்பது தொடர்பாகவே மன்னார் ஆயர் தலைமையிலான கூட்டத்தில் பேசப்பட்டது எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில்தான் பங்குகொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் ஆயர் தலைமையில் கடந்த 11ஆம் திகதி மன்னாரில் தமிழ் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு முன்பாக முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை மன்னார் ஆயர் தலைமையில் மற்றொரு கலந்துரையாடலும் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பானது.

இதில் எமது கட்சியினர் கலந்துகொள்ளவில்லை. 11 மணியின் பின்னரான கலந்துரையாடலிலேயே எமது கட்சியினர் கலந்து கொண்டனர். ஆனால், ஊடகங்கள் சிலவற்றில் தவறான செய்திகளும் புகைப்படங்களும் பிரசுரமாகியுள்ளன.

கூட்டமைப்பைப் பதிவு செய்வது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை என்பதை இங்கு தெளிவுபடுத்தும் அதே வேளை, முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பொது வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகப் பேசப்பட்டது.

குறிப்பாக தமிழர்கள் எதிர்பார்க்கும் நிரந்தர அரசியல் தீர்வினை எட்டுவதற்கு எவ்வாறான பொது வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாகவும் வடக்கு கிழக்கில் யுத்தத்தின் பின்னர் 4 வருடங்களை கடந்த பின்பும் தொடரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டங்களை நடத்தி அழுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி தமிழ்த் தேச அவையை உருவாக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டது.

அத்தோடு இந்த தமிழ்த் தேச அவையினை உருவாக்கி இறுதித் தீர்வை எட்டக்கூடிய பாதையை நோக்கி பயணிக்க 4 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நானும், சட்டத்தரணி ஆர். புவிதரன் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மணிபுரம் பிரதான வீதியை புனரமைத்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா சுந்தரபுரத்தில் இருந்து மணிபுரம் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளமையினால் இவ்வீதியைப் புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதி கடந்த சில வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமையால் குன்றும் குழியுமான நிலையில் காணப்படுகின்றது. எனவே இவ்வீதியை பயன்படுத்தும் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் உரிய நேரத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இதே வேளை இவ்வீதியால் பயணிக்கும் பேருந்துகளுக்கு சேதம் ஏற்படுவதால் தமது சேவையை நிறுத்தப் போவதாக பேருந்து ஓட்டுநர்களும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி தொடர்பாக இப்பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினருக்கும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கும் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்தும் எந்த பயனும் கிடைக்கவில்லை என இக் கிராமங்களை சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-2-266)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்ட 88 மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (அ)

# போதிய வசதிகள் இல்லாத 12 சிறுவர் இல்லங்கள் மூடப்படும்

## வட மாகாண ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திணைக்கள நியம விதிகளுக்கு முரணாக போதியளவு வசதிகளில்லாமல் இயங்கிவரும் 12 சிறுவர் இல்லங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் செல்வி உமா தங்கவேல் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர் இல்லங்களை நடத்துவதற்கான ஆலோசனைகளும் விதிமுறைகளும் ஏற்கெனவே நடைமுறையிலுள்ளது.

இருப்பினும் எமது திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட நியம விதிமுறைகளுக்கு முரணாக வடக்கில் தற்போது 12 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இவற்றினை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு இதில் சில சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் தாங்களாகவே முன்வந்து அந்த இல்லங்களை மூடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

இதன்படி யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத 4 சிறுவர் இல்லங்களும் பதிவு செய்யப்பட்டு போதியளவு இட வசதி மற்றும் ஏனைய வசதிகள் இல்லாத 5 சிறுவர் இல்லங்களும் ,வவுனியா மாவட்டத்தில் பதிவில்லாத 5 சிறுவர் இல்லங்களும் மன்னார் மாவட்டத்தில் ஒரு சிறுவர் இல்லமும் மொத்தமாக 12 சிறுவர் இல்லங்களை மூட எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையைப் பின்பற்றுங்கள்!



- இதயம் விரிவடைந்தால்தான் உண்மை ஞானம் உதிக்கும். உண்மை ஞானம் மலர்ந்தால் மனதில் நம்பிக்கை நிலைக்கும்.
- பொன், பொருளில் ஆசை கொண்டு அற்ப வாழ்க்கை நடத்துபவர்கள் பொருட்படுத்தக்கூடியவர்கள் அல்ல.
- யாருடைய நெஞ்சம் ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவரே மகாத்மா.
- கோழைகளே பாவச் செயல்களைச் செய்வர். தைரியம் கொண்ட மனிதர்கள் ஒருக்காலும் பாவம் புரிய நேர்வதில்லை.
- வஞ்சனையால் பெரிய விடயம் எதையும் வாழ்வில் சாதித்து விடமுடியாது.
- அறிவைப் பலவீனப்படுத்தும் எந்த விடயமாக இருந்தாலும் அதை விஷம் எனக் கருதி ஒதுக்குங்கள்.
- உண்மை உங்களை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். ஒருபோதும் கோழையாகவோ கபடதாரியாகவோ இருக்காதீர்கள்.
- நிச்சயமாக நன்மை விளையும் என்று உணர்ந்தால் மட்டுமே மனதில் இருப்பதை வெளிப்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROYAL CHALLENGERS BANGALORE Vs KINGS XI PUNJAB
மலை 4 மணி
இன்றைய ஆட்டங்கள்
CHENNAI SUPER KINGS Vs DELHI DAREDEVILS
இரவு 8 மணி

### மினி உலகக் கிண்ணத்தை
# புறக்கணிக்குமா இந்தியா?

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளைப் புறக்கணிக்கப் போவதாக இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான செய்திகளை இந்தியாவின் ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவிற்கான வீரர்களின் பிரதிநிதியாக லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு விடுத்த கோரிக்கையை சர்வதேசக் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டமை தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிருப்தியடைந்துள்ளதாகவும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகவே இந்தக் கருத்தை அக்கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவின் வீரர்களுக்கான பிரதிநிதிக்கான தேர்தலில், சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் பிரதம செயற்பாட்டு அதிகாரியான ரிம் மே இனை லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் தோற்கடித்திருந்ததும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படுவதும் தெரிந்ததே.

### சிம்பாவே – பங்களாதேஷ்
# ரி-20 தொடர் சமநிலை



சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ருவென்ரி-20 போட்டியில் பங்களாதேஷ் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாவே சென்ற பங்களாதேஷ் அணி இரண்டு போட்டிகள் கொண்ட சர்வதேச ருவென்ரி-20 தொடரில் பங்கேற்றது.

முதல் போட்டியில் வெற்றி பெற்ற சிம்பாவே 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது போட்டி புலவாயோ நகரில் நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய பங்களாதேஷ் அணியில் தமிம் இக்பால்(43), சாகிப் அல் ஹசன்(40), நாசிர் ஹொசைன (27), அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹீம்(17) ஆகிய வீரர்கள் ஓரளவு சோபித்தார்கள்.

ஏனைய வீரர்கள் ஏமாற்ற. பங்களாதேஷ் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 168 ஓட்டங்கள் எடுத்தது. சிம்பாவே சார்பில் உட்சேயா 2 விக்கெட் வீழ்த்தினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய சிம்பாவே அணிக்கு ஹாமில்டன் மசகட்சா(2) ஏமாற்றினார். சிபண்டா(32), சிகந்தர் ராஜா(32) ஆறுதல் அளித்தனர்.

முடிவில் சிம்பாவே அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 134 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது.

பங்களாதேஷ் சார்பில் சாகிப் அல் ஹசன் 4, அப்துர் ரசாக், ஷபியுல் இஸ்லாம் தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் விருதை ஆல்-ரவுண்டராக அசத்திய வங்கதேசத்தின் சாகிப் அல் ஹசன் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி -20 தொடர் 1-1 என சமன் ஆனது.

முன்னதாக இவ்விரு அணிகள் மோதிய டெஸ்ட் தொடர்(1-1) டிரா ஆனது. ஒருநாள் தொடரை சிம்பாவே அணி(2-1) கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

# செரீனா, நடால் சம்பியன்



மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிசுற்றில் முதன் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும், 2ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய ஷரபோவாவும் மோதினார்கள்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய செரீனா 6-1, 6-4 என்ற நேர் செட்டில் ஷரபோவாவை வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார். 2004ஆம் ஆண்டுக்கு பின்பு இதுவரை செரீனாவை 13 முறை சந்தித்துள்ள ஷரபோவா அவை அனைத்திலும் தோற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மகுடம் சூடிய செரீனாவுக்கு ரூ.12 கோடியும், 2ஆவது இடம் பிடித்த ஷரபோவாவுக்கு ரூ.6 கோடியும் பரிசாக கிடைத்தது. 18 ஆண்டுகளாக டெனிஸ் விளையாடி வரும் 31 வயதான செரீனாவுக்கு இது 50ஆவது சர்வதேச பட்டமாகும். இதன் மூலம் 50 மற்றும் அதற்கு மேல் பட்டம் வென்ற 10ஆவது வீராங்கனை என்ற சிறப்பை செரீனா பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபெல் நடால் 6-2, 6-4 என்ற கணக்கில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்காவை வீழ்த்தி பட்டத்தை தட்டிச் சென்றார். நடால் வென்ற 23ஆவது ஏடிபி மாஸ்டர்ஸ் பட்டமாகும். ஒட்டுமொத்தத்தில் இது அவரது 55ஆவது சர்வதேச பட்டமாகும்.

# போட்டியின் போது மெஸி காயம்



ஆர்ஜென்டினா மற்றும் பார்சிலோனா ஆகிய அணிகளின் முன்கள வீரரான லயனல் மெஸி உபாதைக்குள்ளாகியுள்ளார்.

அட் லிட்டிகோ மெட்ரிட் அணிக்கெதிரான போட்டியின்போது தொடைப் பகுதியில் அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் சம்பியன் லீக் போட்டியின் போது ஏற்பட்ட காயத்திலிருந்து முழுமையாக உடற்தகுதி பெறுவதில் மெஸி சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்.

இந்த நிலையில் பருவகாலப் போட்டிகளில் அவர் தொடர்ந்து விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது.

# ஒப்பந்தத்தை நீடிக்கவில்லை

– தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளர்



தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியின் ஒப்பந்தத்தை நீடிக்க விருப்பமில்லை என தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளர் கரி கேர்ஸ்டன் அறிவித்துள்ளார்.

இதன்படி இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளே அவரது இறுதித் தொடராக அமையவுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்ற கரி கேர்ஸ்டன். 2 வருடங்களுக்கு அந்தப் பொறுப்பினை ஏற்றிருந்தார்.


2 வருடங்களின் பின்னர் அந்த ஒப்பந்தத்தை மேலும் 2 வருடங்களுக்கு நீடிக்கின்ற வசதியும் அந்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட போதிலும், அதற்கெதிராக அவர் முடிவெடுத்துள்ளார்.

தனது குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிட விரும்புவதாகவும், எனவே தனது 2 வருட ஒப்பந்தம் நிறைவுபெற்றதும் தென்னாபிரிக்கப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகப் போவதாகவும் கரி கேர்ஸ்டன் அறிவித்துள்ளார்.

பயிற்றுவிப்பாளராகப் பதவி வகிக்கக் கிடைத்த வாய்ப்பிற்காக நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ள கரி கேர்ஸ்டன், அதற்காக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவிப்பதாகவும். குறித்த காலத்தில் தனது குடும்ப வாழ்க்கையைச் சரிவர முகாமை செய்ய, தனது பயிற்றுவிப்புப் பணிக்குப் போதிய இலகுபடுத்தல்களை வழங்கியமைக்காக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கரி கேர்ஸ்டனின் பயிற்றுவிப்புக்கான காலத்தில் தென்னாபிரிக்க அணி டெஸ்ட், ஒருநாள் தரப்படுத்தல்களில் முதலிடத்தைப் பெற்றிருந்ததோடு, இன்னமும் டெஸ்ட் தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### படகு கவிழ்ந்ததில்
# ஒலிம்பிக் வீரர் மரணம்



ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை வெற்றிகொண்ட பிரித்தானியாவின் படகோட்டி வீரர் அன்ட்ரூ சிம்சன் உயிரிழந்துள்ளார்.

சான் பிரான்ஸிஸ்கோவில் நடைபெறவுள்ள அமெரிக்க கிண்ண போட்டிகளுக்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போது படகு கவிழ்ந்ததில் அவர் இந்த அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளார்.

11 வீரர்கள் பங்குபற்றிய படகோட்டப் போட்டியில் பிரித்தானியா சார்பாக அவர் பதக்கமொன்றை பெற்றிருந்தார்.

36 வயதான சிம்சன் படகுக்கு அடியில் சிக்கியதாகவும், அவரை காப்பாற்றும் நடவடிக்கை தோல்வியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க கிண்ண போட்டிகளில் சுவீஸ் அணி சார்பாக அவர் பங்குபற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் அணித் தலைவரின் மறுப்பு



அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகியமை தவறான ஓர் விடயம் என உணர்வதாக பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகுர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

சிம்பாபே அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான சர்வதேச இருபதுக்கு-20 கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றதன் பின்னர் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சிம்பாபே அணிக்கெதிரான சர்வதேச ஒருநாள் தொடரை இழந்ததை தொடர்ந்து தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக, முஸ்பிகூர் ரஹீம் அண்மையில் கூறியிருந்தார்.

அத்துடன் அணியாக இணைந்து பணியாற்றுவதில் பிரச்சினை காணப்படுவதாலேயே தலைவர் பதவியில் இருந்து தாம் விலகியதாக வெளியிடப்பட்ட தகவலையும் அவர் நிராகரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொல்லாட் அதிரடி

# சன் ரைசர்ஸை வீழத்தி மும்பை அபார வெற்றி

பொல்லாட்டின் அதிரடியான ஆட்டத்தால் சன் ரைசர்சுக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 62-வது லீக் போட்டி நேற்றிரவு 8 மணிக்கு மும்பையில் நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஐதராபாத் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பட்டேல் மற்றும் தவான் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினர். பட்டேல் 14 பந்தில் 26 ரன் எடுத்த நிலையில் மலிங்க வீசிய பந்தில் ராய்டுயிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த விஹாரி தவானுடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். தவான் - விஹாரி ஜோடி சேர்ந்து 73 ரன்கள் குவித்தனர். தவான் 59 ரன்னில் ஜோன்சன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஒயிட் விஹாரியுடன் ஜோடி சேர்ந்தார். அதிரடியாக விளையாடிய ஒயிட் 23 பந்தில் 43 ரன்கள் குவித்தார்.




இறுதியாக ஐதராபாத் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 178 ரன்கள் எடுத்தது.

179 ரன்கள் வெற்றி இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் களமிறங்கியது. தொடக்க வீரர்களாக டெண்டுல்கர் மற்றும் ஸ்மித் களமிறங்கினர். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஸ்மித் 21 ரன் எடுத்தபோது சர்மா வீசிய பந்தில் கிளின் போல்ட் ஆனார். சச்சினுடன் ஜோடி சேர்ந்து தினேஷ் கார்த்திக் விளையாடினார். பின்னர் காயம் காரணமாக சச்சின் வெளியேறினார். அடுத்து ரோகித் சர்மா களமிறங்கினார். கார்த்திக் 30 ரன் எடுத்தபோது அவுட் ஆனார்.




பின்னர் வந்த ராய்டுயும் 2 ரன்னில் வெளியேற மும்பை 13.2 ஓவருக்கு 99 ரன்களுக்கு 3 விக்கெட்டை இழந்து தடுமாறியது.

4-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பொல்லார்ட் - சர்மா ஐதராபாத் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். பொல்லார்ட் 20 பந்துகளில் 50 ரன்களை அடித்து அசத்தினார்.

இறுதியில் 6 பந்துகளில் 7 ரன் எடுக்க வேண்டிய நிலையில் பொல்லார்ட் 2 சிக்சர்களை அடித்து மும்பை அணியை வெற்றி பெறச்செய்தார்.

இதனால் 10 வெற்றிகளை பெற்று மும்பை இந்தியன்ஸ் 20 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் அடைந்தது.

சிறப்பாக விளையாடிய பொல்லார்ட் 27 பந்தில் 66 ரன்கள் (2 பவுண்டரி 8 சிக்சர்) அடித்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் பொல்லார்ட் தெரிவானார்.

# அஸ்வினை அடித்து நொறுக்க முன்னரே திட்டமிட்டோம்-வோட்சன்



சென்னை அணியில் தொடர்ந்து சிறப்பாக வீசி வருபவரும் இந்திய அணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளருமான அஷ்வின் நேற்று முன்தினம் ராஜஸ்தான் அணியின் ஷேன் வோட்சன் மற்றும் ஸ்டுவேர்ட் பின்னியிடம் சரியாக வாங்கிக் கட்டிக் கொண்டார்.

இது குறித்து ஷேன் வோட்சன் கூறுகையில், அஷ்வினை குறிவைத்துத் தாக்குவது என்பது ஏறக்குறைய உள்ளுணர்வு அதாவது முன்கூட்டியே தீர்மானித்த உள்ளுணர்வு என்று கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில், உள்ளுணர்வாகவே எங்களுக்குத் தெரியும் அஷ்வினை இன்று போட்டுத் தாக்கினால்தான் வெற்றி பெற முடியும் என்று.

நாங்கள் அந்த சமயத் தில் பவுண்டரி அடிக்க கஷ்டப்பட்டோம். அப்போதுதான் அஷ்வின வந்தார். நாங்கள் விரும்பியவாறு வீசினார் அஷ்வின். எங்களுக்கு சாதகமான அதாவது ஸ்டுவேர்ட் பின்னி, எனக்கு சாதகமான பகுதிகளில் அவர் வீசினார். அதுதான் உதவியது.

சூப்பர்கிங்ஸ்களத்தடுப்பு அபாரமாக இருந்தது அன்று, வேகப்பந்து வீச்சும் அற்புதமாக அமைய ராஜஸ்தான் றோயல்ஸ் தடுமாறியது.

ஒரு சிக்ஸ் கூட அடிக்காமல் கிட்டத்தட்ட பாதிப் போட்டி முடிந்த நிலையில் 60 பந்துகளில் 93 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை ராஜஸ்தான் றோயலசுக்கு ஏற்பட்டது.

அப்போதுதான் தெய்வமாக வந்தார் அஷ்வின். 23 ஓடடங்களை வாரி வழங்கினார். ஆட்டத்தின் போக்கையே மாற்றி விட்டது அந்த ஒரு ஓவர்.

கடைசியில் 17 பந்துகள் மீதம் வைத்து 142 ஓட்டங்கள் வெற்றி இலக்கு எட்டப்பட்டது.

# மனைவியாகிய மாணவி சாட்சியாளருடன் மாயம்!

காதலனுடன் பதிவு திருமணம் செய்து கொண்ட ஒன்றரை மணி நேரத்திற்குள் மணப்பெண் (காதலி) சாட்சியாளருடன் ஓடிப்போன சம்பவமொன்று கம்பளை மாவத்துற பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது விசேட சித்திகளை (ஏ) பெற்ற மாணவியே இவ்வாறு ஓடிவிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கண்டியிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் பயின்று வந்த இந்த மாணவி கண்டியிலுள்ள மற்றுமொரு பிரபல பாடசாலையில் உயர் தரத்தில் கல்விப் பயிலும் மாணவன் காதலித்து வந்துள்ளார்.

இருவரும் இரவொன்றை தனியாக கழிக்க விரும்பினர். இந்நிலையில் காதலியின நண்பி ஒருவரின் வீட்டுக்கு இருவரும் சென்றுள்ளனர்.

வீட்டிலிருந்தவர்கள் இவர்கள் இருவரையும் தனியாக தங்கவைப்பதற்கு அனுமதிக்க மறுத்துள்ளதுடன் அதன் தார்ப்பரியங்களை விளக்கி கூறியுறியுள்ளனர்.

அத்துடன் இருவருக்கும் பதிவு திருமணம செய்து வைப்பதற்காக உலப்பனையிலுள்ள திருமண பதிவாளர் அலுவலகத்திற்கு பிற்பகல 4.30 மணியளவில் அழைத்து சென்றனர்.

பதிவு திருமணம் முடித்துக்கொண்ட இருவரும் நண்பியின் வீட்டுக்கு மாலை 5.30 மணியளவில் வருகைதந்தனர்.

சந்தர்ப்பத்தை பார்த்துக்கொண்டு மணக் கோலத்திலிருந்த பெண் பதிவு திருமணத் திற்கு சாட்சி கையெழுத்திட்டவருடன் வீட்டை விட்டு ஓடியுள்ளார்.

தனது முன்னாள் காதலனான ஒரு பிள்ளையின் தந்தையுடனேயே குறித்த பெண் ஓடிவிட்டார்.

கைகளை கோர்த்தவாறு இருவரும் ஓடுவதை கண்ட கிராமவாசிகள் அவர்களை பிடிப்பதற்காக துரத்தியபோதும் கிரா மத்தவர்களால் அவ்விருவரையும் பிடிக்கவில்லை.


அவ்விருவரும் அவ்வழியாக வந்த பஸ்ஸில் ஏறி ஓடிவிட்டனர்.

இந்நிலையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சகலரும் கம்பளை பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர்.

காதலனுடன் பதிவு திருமணமாகிவிட்ட போதும் தன்னால் பழைய காதலனை மறக்க முடியவில்லை என்பதனால் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவரோடு ஓடிப்போக தீர்மானித்ததாக அந்த மாணவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சகலரையும் கடுமையாக எச்சரித்த பொலிஸார் இந்த பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் யாழ்.பல்கலைக்கழக அணி முன்னிலை




வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 4வது ஆண்டாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2013 இல் இருந்து 30.04.2013 வரை 56 போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளது.

அதன் அடிப்படையில் யாழ் பல்கலைக் கழக அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 66.3 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், யாழ். ஜொனியன்ஸ் அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றிபெற்று 55.8 புள்ளிகளை பெற்று 2வது இடத்திலும் ,ஜொலிஸ்ரார் அணி 11 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 55.7 புள்ளிகளை பெற்று 3 வது இடத்திலும் ,கே.சீ.சீ.சீ அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 35 புள்ளிகளை பெற்று 4வது இடத்திலும், ஓல்ட்கோல்ட்ஸ் அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 27.1 புள்ளிகளைப் பெற்று 5வது இடத்திலும், யாழ்.சென்றல் அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளிலும் வெற்றிபெற்று 22.2 புள்ளிகளை பெற்று 6வது இடத்திலும், திருநெல்வேலி கிறிக்கற் கழக அணி 5 போட்டிகளிலும் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 21.3 புள்ளிகளை பெற்று 7வது இடத்தி லும் ,சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 6 போட் டிளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 18.9 புள்ளிகளை பெற்று 8வது இடத்திலும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டி களில் வெற்றிபெற்று 18.5 புள்ளிகளை பெற்று 9வது இடத்திலும்,சிறிகாமாட்சி அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 16.8 புள்ளிகளை பெற்று 10வது இடத்திலும் காணப்படுகின்றது.

மேற்படி நிகழ்வில் முதலாவது இடத்தை கைப்பற்றும் அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் ரூ.10,000 பணப்பரிசிலும் வழங்கப்படும் .

. மேற்படி வெற்றிக் கிண்ணத்தையும் ,பணப் பரிசினையும் 2010,2011 ஆம் ஆண்டுகளில் யாழ்.பல்கலைக்கழக அணியும், 2012ம் ஆண்டு கே.சீ.சீ.சீ அணியும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட நிகழ்வில் முதல் மூன்று இடங்களை கைப்பற்றும் அணிகள், யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் முக்கோணப் போட்டிக்கு தகுயுடையவர்களாவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் வீரவன்சவை கைது செய்ய வேண்டும்

அரசில் அங்கம் வகிக்கும் அமைசசா விமல் வீரவன்சவையே முதலில பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம் தெரிவித்தார்.

ராஜகிரியவில் நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றால், தான் அரசாங்கத்திலிருந்து விலகுவதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அவரை தான் முதலில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

ஏனெனில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வீரவன்ச போன்றவர்களினால் தான் பிரிவினைவாதம் பேசப்படுகின்றது.

ஏனெனில் வடமாகாணம் இலங்கையின் ஒரு பகுதி இல்லை என்பதையே அவர் சுட்டிக்காட்டுகின்றார். இது இலங்கையின் ஐக்கியத்திற்கு எதிரான கருத்தாகும்.

யுத்தம் முடிந்துவிட்டது நாட்டில் தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ முடியுமென ஜனாதிபதி கூறுகின்றார். இந்நிலையிலேயே அரசாங்கத்தில் பிரிவினைவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சிவராம் கொலை வழக்கில் சாட்சியம்

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை வழக்கில் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று முதற்தடவையாக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

2005-ம் ஆண்டு ஏப்ரல் 28-ம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் சடலம் நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் கிடந்த நிலையில் மீட்கப்பட்டது.

சிவராம் கொலை தொடர்பில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிறிஸ்கந்தராஜா என்ற சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-11)

# வீடு திரும்...

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயரும், தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான அசாத் சாலி சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது உண்ணாவிரதம் இருந்துவந்த அசாத் சாலி கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைகளை பெற்று வந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அசாத் சாலி மீதான தடுப்புக் காவல் நீக்கப்பட்டு, அவர் விடுதலை செய்யப்பட்டார். (எ-11)

# வட மாகாண...

அடங்கிய குழுவொன்றை சுயேட்சையாகக் களமிறக்குவதற்கும் அரசு முயற்சி எடுத்து வருவதாக அறியமுடிகின்றது.

இவ்விவகாரம் சம்பந்தமான ஆரம்பக் கட்ட ஆலோசனைகள் சாதகமாக முடிபடைந்துள்ளன எனவும் தெரியவருகின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கைப் படையினரிடம் சரணடைந்து - பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரே வடக்குத் தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# வடக்குத் தேர்...

கட்சி நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய தயாராகி வருகிறது.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்திய தலைவர்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். எனினும் பல காரணங்களை கூறி அதனை ஒத்திவைத்து வந்தது போல், இம்முறையும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்த இந்தியாவின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காகவே செப்ரெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி இந்தியாவிடம் கூறியிருந்தார் எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை வட மாகாணத்தில் ஏன் தேர்தல் நடத்தக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

வட மாகாணசபை தேர்தலை தடுத்து நிறுத்த வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச முயற்சி எடுத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் தேர்தல் நடத்துவது தவறில்லை என்றால், வடக் கில் தேர்தல் நடத்துவதில் என்ன தவறு என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ் வாறு வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதனை தவிர்ப்பதன் மூலம் பிரதேச மக்களின் ஜனநாயக உரிமைகள் முடக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

# எச்சரிக்கை...

பகுதிகளில் மணித்தியாலத்திற்கு 70 கி.மீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசலாம். அத்தோடு மேற்குறிப்பிட்ட பகுதிகளில் கடற் பகுதிகள் கொந்தளிப்பாக காணப்படும்.

இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு கரையோரங்களில் அவதானமாக இருக்கவேணடும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தென்மேற்கு திசையில் கடும் காற்று வீசும். அதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் இருளுடன் மேக மூட்டங்கள் காணப்படும் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 200 மி.லீ. வரையிலான கடும் மழை வீழ்ச்சி பதிவாகும். அத்தோடு கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் 100 மி.லீ. வரையிலான மழை வீழ்ச்சி பதிவாகலாம். மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் எனவும் தெரிவித்தார். (எ-11)

# யாழ்.நகரப்...

இவர்களுடன் ஊடகவியலாளர்களும் இணைந்து கொண்டனர். விடுதியை முற்றுகை இட்டபோது 22 வயது உடைய இளைஞன் ஒருவரும் 21 வயதுடைய யுவதி ஒருவரும் அங்கு ஜோடியாக இருநதுள்ளனர்.

இவர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் தனது அலுவலகத்திற்கு அழைதது்ச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

இது தொடர்பில் இரு வருடைய பெற்றோர்களுக்கும் தெரியப்படுத்திய பின்னர் மேலதிக நடவடிக்கை பற்றி ஆலோசிக் கப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (ந)

# மின்னல் தாக்கி...

தாக்கியதினாலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுளளது.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்த தங்கவேலாயுதம் அருளானந்தம் (வயது-18) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சம்பவத்தில் இவருடன் சென்ற மற்றுமொரு இளைஞர் அதிர்ச்சியில் மயக்கமுற்றதாகவும் பின்னர் மயக்கம் தெளிந்து கரைக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் கடலுக்குள் வீழ்ந்து மூழ்கியதாகவும் சடலத்தை மீட்பதற்கு அப்பகுதி மீனவர்களும் கடற்படையினரும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை குறித்த இளைஞனின் சடலம் மீட்கப்படவில்லை. (எ-10,24)

# பஸ் விபத்...

களுக்குள்ளாகியுள்ளன.

இதில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட சுமார் 20 பேர்வரை யாழ். போதனா வைத்தியசாலையிலும் ஏனையோர் சாவகச்சேரி ஆதார வைத்திசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-4,6)

# யாழ்ப்பாணத்தை சூழ...

கத்தினால் யாழ்.மாவட்டத்தில் 6 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நலன்புரி நிலையத்தில் இருந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை மல்லாகத்தில் 15 குடும்பங்களும் கொல்லங்கலட்டியில் 27 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாயில் தலா நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் ஊர்காவற்றுறை, சங்கானை மற்றும் தெல்லிப்பழை ஆகிய இடங்களில் சுமார் 200 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மரங்கள் முறிந்து விழுந்த நிலையிலும் காற்றினால் கூரைகள் அள்ளுண்டு செல்லப்பட்டமையினால் இந்த தற்காலிகக் குடிசைகள் சேமடைந்துள்ளன.

இதேவேளை யாழ்.மாவிட்டபுரம், மாவை கலட்டி பகுதியில் பனை மரமொன்று முறிந்து வீடொன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இது இவ்வாறிருக்க புன்னாலைக் கட்டுவன், சூறாவத்தை பகுதியில் இடி தாக்கியுள்ளது. அரியாலையிலுள்ள நாவலடி, புங்கன்குளம், பூம்புகார் ஆகிய இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் உலர் உணவு பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (எ-6,11)


உங்கள் அன்பு உறவுகளுக்கு ... !

www.creativedesk.lk/shop

மேலதிக விபரங்களுக்கு :-

(2610) 077 777 8529



## A/L வாழ்வின் முடிபல்ல

ஏனெனில்...

கனவு தேசமான கனடாவில்

படிக்க, உழைக்க கையிலுள்ள காசே போதும்

கங்காரு தேசமான அவுஸ்திரேலியாவில்

படிக்க உழைக்க சிறு பணம் தான் தேவை

விவசாயத்தில்தன்னிறைவைக்கொண்டநியுசிலாந்து

படிக்க உழைக்க நிரந்தர குடியுரிமை தரவல்ல நிம்மதியான தேசமாகும்.

ஐரோப்பிய தீவான சைப்பிரசில்

படிக்கச் செல்ல சொற்ப செலவு. ஆனால் பகுதி நேரமாக இலட்சம் சம்பாதிக்கலாம்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் சுயவிபரக் கோவையுடன் CV எங்களிடம் வாரு ங்கள். மிகுதியை நாங்கள் பார்த்துக் கொள்வோம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (C-3321)

021 221 9016, 0215689090 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.




## தூயஆவி பெருவிழா

கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி மாதா யாத்திரை ஸ்தலத்தில்

*18.05.2013 இரவு 8.30 மணிக்கு ஆரம்பமாகி 19.05.2013 ஞாயிறு அதிகாலை 5 மணிக்கு திருப்பலியுடன் நிறைவுபெறும்.*

*15, 16, 17 ஆம் திகதிகளில் மாலை 4 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் இடம் பெறும்.*


பெந்தக்கோஸ்து விழா நாளில் தூய ஆவியானவரின் அருட்பொழிவை பெற வாரீர் ... வாரீர் ... அன்போடு அழைக்கின்றோம்

பங்குத்திருச்சபை
கரம்பொன்

(C-3301)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழும்

தோற்றம் 18 10 1964



மறைவு 16 04 2013

## அமரர் கனகசபை யோகேந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.05.2013 வியாழக் கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அல்வாய் மேற்கு, திக்கம். (2611) குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org